விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
பக்கங்கள்: பதினாறு
Valampurii
சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 09 செவ்வாய்க்கிழமை (26.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 311

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து



இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றம் தொடர்பாக வெளியிடப்பட்ட ஆதாரப் புகைப்படங்கள்...

## சர்வதேச நீதிமன்றில் இலங்கைக்கு வழக்கு?

(கோபன்ஹேகன்)

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அனைத்து பாதுகாப்பு படை அதிகாரிகளுக்கும் எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்படவுள்ளது.**

புலம்பெயர்ந்து டென்மார்க்கில் வாழும் ஈழத்தமிழர் இருவர் மேற்கொண்ட முயற்சிகளால்,டென்மார்க்கின் பிரபல சட்டத்தரணியால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அடுத்த வாரம் வழக்கு பதியப்பட இருக்கின்றது.

இந்த இரு டென்மார்க் வாழ் புலம்பெயர் ஈழத்தமிழர்களின் நடவடிக்கையில் டென்மார்க் தமிழர் பேரவையின் மானிட விவகார குழு முழுமையாக இணைந்து செயற்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

கடந்த பல மாதங்களாக இவர்கள் இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட படுகொலை, கடந்த ஆண்டு படையினர் மேற்கொண்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஆவணங்களை சேகரித்து சட்டவியலாளரிடம் கையளித்தனர் என்றும்,

கடந்த வருடம் டென்மார்க் தமிழர் பேரவையினர் டென்மார்க் அரசின் சர்வதேச குற்றவியல் சட்டத்தரணியிடம் இலங்கை அரசு மேற்கொண்ட இனப்படுகொலையின் ஆதாரங்களை கையளித்தனர் என்றும் கூறப்பட்டது. இப்போது டென்மார்க் சட்டவியலாள்ர்களால் ரோம் உடன்படிக்கையின் அடிப்படையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்கு தொடரப்படவிருக்கிறது. (16ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போன மாணவன் காயங்களுடன் சடலமாக மீட்பு

### கனகாம்பிகைகுளத்தில் பரபரப்பு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி கனகாம்பிகைகுளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை காணாமல்போன மாணவன் ஒருவர் நேற்று காலை குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். அவரது சடலத்தின் கழுத்துப் பகுதியில் காயங்கள் இருப்பதுடன் வாய்ப் பகுதியில் இரத்தக் கறைகள் காணப்படுவதாகவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.** (16ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா வழக்கு விசாரணை மற்றொரு நீதிபதி இராஜினாமா

(கொழும்பு)

பொன்சேகா தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுமீதான விசாரணைகளில் இருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகிக்கொள்வதாக நீதியரசர் கே.பி.திஸ்ஸசிறி அறிவித்துள்ளார்.

இந்த மனு நேற்று எரிக் பஸ்நாயக்க,கே.பி.திஸ்ஸசிறி ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது தான் தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த வழக்கில் இருந்து விலகிக்கொள்வதாக நீதியரசர் கே.பி.திஸ்ஸசிறி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து புதிய நீதியரசர்கள் முன்னிலையில் வழக்கை விசாரிக்குமாறு நீதியரசர்கள் மேன்முறையீடு நீதிமன்றத்தின் தலைவருக்கு பரிந்துரை செய்துள்ளனர். புதிய நீதியரசர்கள் நியமிக்கப்பட்டவுடன் சரத் பொன்சேகாவின் மனு மீதான விசாரணைகள் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## விளக்கமறியல் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழினியின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் இறுதிக் கட்ட யுத்தத்தின் பின் படையினர்,தமிழினி உள்ளிட்ட பல புலிகளின் முக்கியஸ்தர்களை கைது செய்தனர்.அதில் தமிழினி உள்ளிட்ட முக்கியமான சிலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் நோக்கில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆயினும் தமிழினிக்கு எதிரான குற்றப்பத்திரிகை இதுவரை நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவில்லை. (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்தோனேசியாவில் பாரிய பூகம்பம்

(ஜகார்த்தா)

இந்தனோசியாவின் சுமத்திரா தீவுக்கு அருகில் நேற்றுப் பாரிய பூகம்பம் ஒன்று ஏற்பட்டுள்ளது. அதையடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் சற்று நேரத்தில் அந்த எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது.

கடலடியிலிருந்து 14.2 கிலோமீற்றர் ஆழத்தில் 7.2 தொடக்கம் 7.5 ரிக்டர் அளவிலான இப் (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளும் ஐ.தே.கவும் இணைந்து இனச்சுத்திகரிப்பில் ஈடுபட்டனர்

### ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த உடன்படிக்கையை செய்து கொண்டபோது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், ஐக்கிய தேசிய கட்சி ஆகியன வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்பு வாழ்ந்திருந்த சிங்கள மக்களுக்கு எதிராக மாபெரும் இன சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

இம் மாகாணங்களில் சிங்கள மக்களுக்கு சொந்தமாக இருக்கும் காணிகளின் உறுதிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தேவையான தமிழர்களின் பெயர்களுக்கு ஐ.தே.க. அரசு மாற்றி கொடுத்து விட்டது என்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்தசிறி வர்ணசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

சுமார் 97 குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறவென வந்து யாழ்.புகையிரத நிலையத்தில் தற்காலிகமாக தங்கியிருக்கின்றன. (16ஆம் பக்கம் பார்க்க)

## தாதியர்கள் பணி பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று தாதியர்கள் மூன்று மணி நேரம் அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் வைத்தியசாலையின் செயற்பாடுகள் சில மணிநேரம் ஸ்தம்பிதமடைந்தன.

தாதியர் சங்கங்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று நாடு முழுவதும் மூன்று மணிநேர வெளிநடப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வெளிநடப்பு நடவடிக்கை பூரண வெற்றி பெற்றதாக அரசாங்க தாதியர் சேவை (16ஆம் பக்கம் பார்க்க)



## நாடாளுமன்றுக்கு ஜனாதிபதி விஜயம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நடைபெறும் வரவு செலவுத்திட்ட பிரேரணை மீதான நிதியமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முகமாக நேற்று பிற்பகல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடளுமன்றத்துக்கு விஜயம் செய்ததாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

# அடிப்படை உரிமைகள்கூட இல்லாமல் சிறையில் வாடுகிறார் பொன்சேகா

## முன்னாள் பிரதம நீதியரசர் கவலை

(கொழும்பு)

யுத்தம் முடிபடைந்து 8 மாதங்கள் செல்லும் முன்னர் கடுமையான குற்றவாளி அனுபவிக்கும் அடிப்படை உரிமைகளை கூட இல்லாமல் செய்யப்பட்டு முன்னாள் இராணுவத்தளபதி சிறைவைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கூறியுள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி கொழும்பு ஜெயவர்த்தன கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற மகஜரில் கையெழுத்துப் பெறும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசியல் யாப்பின் 13ஆவது சரத்தில் தனி நபர்களின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டுள்ளது. எவரேனும் ஒரு நபர் கைது செய்யப்பட்டால் குற்றவியல் சட்டத்தில் காணப்படும் விசாரணைகளுக்கு அமையவே அவர் கைது செய்யப்பட வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

எனினும் சரத் பொன்சேகா அவ்வாறு கைது செய்யப்படவில்லை கைது செய்யப்பட்ட ஒருவர் 48 மணித்தியாலத்திற்குள் அதிகாரமுள்ள நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறான நீதிமன்றம் வழங்கும் உத்தரவின்றி கைது செய்யப்பட்டவரின் சுதந்திரத்தை இல்லாமல் செய்ய முடியாது எனவும் அந்த சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


எனினும் சரத் பொன்சேகா விடயத்தில் இவ்வாறான விடயங்கள் கடைப்பிடிக்கப்படவில்லை.

அவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட வில்லை. கைது செய்யப்பட்ட பின்னர் சில நாட்கள் அவர் எங்கு வைக்கப்பட்டிருந்தார் என்பது கூட அறிந்திருக்கவில்லைஎன முன்னாள் நீதியரசர் தெரிவித்துள்ளார். (ச-5)



# தரம் குறைந்த பற்றறியால் 37 ஆயிரம் லீற்றர் தண்ணீர் மாசு

கையடக்கத் தொலைபேசிக்கான தரம் குறைந்த பற்றறி ஒன்று 37 ஆயிரம் லீற்றர் தண்ணீரை மாசுபடுத்தக் கூடியது என்கிற அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன.



காலநிலை மாற்றங்களால் ஏற்படக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து தென்னாசிய நாடுகளுக்கிடையிலான மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு பங்களாதேஷ் நாட்டில் உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியி ருக்கின்றார்.

அவர் அங்கு முக்கியமாகத் தெரிவித்தவை வருமாறு,

கையடக்கத்தொலைபேசிகளுக்கு தரம் குறைந்த பற்றறிகளை பயன்படுத்துகின்றமையால் தென்னாசிய மக்கள் ஏராளமான சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள்.

சந்தையில் சாதாரணமாக விற்கப்படும் பற்றறிகள் ஒரு வருடத்துக்கும் குறைவான பாவனைக்காலத்தைக் கொண்டவை. எனவே இவை விரைவில்செயலிழந்து விடுகின்றன.

அண்மைய ஆய்வுகளின் படி கையடக்கத் தொலைபேசியின் தரம் குறைந்த பற்றறி ஒன்று 37 ஆயிரம் லீற்றர் தண்ணீரை மாசுபடுத்தக் கூடியது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இம்மாசு நீரை அருந்துகின்றமையால் புற்றுநோய்கள், சரும நோய்கள் ஆகியனஉட்பட ஏராளமான நோய்கள் ஏற்பட்டு விடுகின்றன. எனவே இந்நிலையை மாற்ற தென்னாசிய நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

கையடக்கத் தொலைபேசிகளின் தரம் குறைந்த பற்றறிகள் பாவனைக்கு முடிபு கட்ட உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (ச-5)

# வன்னியிலுள்ள விதவைகள் குறித்து அரசாங்கம் கவனத்தில் கொள்வதில்லை

## சித்தார்த்தன் சாட்சியம்



(கொழும்பு)

வடபகுதியில் இடம்பெற்ற யுத்தத்தினால் விடுதலைப்புலிகள் இயக்கத்தினைச் சாராத பெரும்பாலான பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களை அரசாங்கம் கவனத்திற்கொள்ளாது இருப்ப தாகவும் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட “கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு” முன்னிலையில் கொழும்பில் நேற்று திங்கட்கிழமை சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து சாட்சியமளித்த அவர் மேலும் கூறியதாவது,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விதவைகளுக்கு அரசாங்கம் எந்தவொரு சலுகையினையும் வழங்காதுள்ளது. ஆனால் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களைகவனத்திற்கொண்டு அவர்களுக்கான சலுகைகளை தொடர்ந்தும் அரசாங்கம் வழங்கி வருகின்றது.

வடக்கின் அதிகளவான பிரதேசங்களில் இராணுவத்தின் நிர்வாகமே, பெருமளவில காணப்படுகிறது. இதேவேளை முல்லைத்தீவிலும் பண்டிவிரிச்சானிலும் அதிகளவிலான தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் அப்பிரதேச மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை. இராணுவத்தினர் மாத்திரமே குறித்த விகாரைகளுக்கு செல்ல வேண்டியதாக உள்ளது.

நாம் எந்தவொரு மதத்துக்கும் விரோதமானவர்கள் அல்லர். ஆனால்பொதுமக்களுக்குபாதிப்பினைஏற்படுத்த விடமாட்டோம் என்றார். (ச-5)

## ரத்வத்தைக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

முன்னாள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுரத்த ரத்வத்தையின் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் 19ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


குறுகிய காலத்தில் 35 கோடி ரூபாய் சொத்துக்களை சேர்த்தமை தொடர்பில் கையூட்டலுக்குக்கெதிரான ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டமனு நேற்று கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.


இதன்போது பிரதிவாதியான ரத்வத்தையின் சார்பில் விளக்கமளிக்கப்பட்டது. இதனையடுத்து மனுதாரர் தரப்பால் கையூட்டுக் கெதிரான ஆணைக்குழுவின் சார்பில் விளக்கம் அளிக்க கால அவகாசம் கோரப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட மேல்நீதிமன்றம் வழக்கை ஒத்திவைத்தது. (ச)

# இலவச மொழி வகுப்புக்கள்

Eu Lanka Forum தனது கல்வி கலாசார சமூக சேவை அடிப்படையில் ஆரம்பிக்க இருக்கும் இலவச சிங்கள ,ஆங்கில ,ஜேர்மன் மொழி வகுப்புகள் நாளை புதன்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு 29,பழம் வீதி,கந்தர்மடம் என்னும் முகவரியில் ஆரம்பிக்கவுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள ஜேர்மனியின் முகாமைத்துவ கல்லூரியின் பிரதம பணிப்பாளர் திருமதி மரியோன் பேர்க்மன் இதனை அங்குரார்ப்பணம் செய்துவைக்கவுள்ளார். இக்கல்லூரியில் சிங்கள, ஆங்கில மொழிக்கல்வியும் ஜேர்மனிக்கு குடிவரவுள்ளவர்களுக்கான ஜேர்மன் மொழிக் கல்வியும் கற்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)







ஹற்றன் நஷனல் வங்கியின் வேலணை வாடிக்கையாளர் கிளைத் திறப்பு விழாவில் வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரி ராஜேந்திரா தியாகராஜா மாணவி ஒருவருக்கு புத்தகப்பை வழங்குவதையும் முதல் வைப்புப் பணத்தை தொழிலதிபர் நாகரத்தினத்திடமிருந்து பெற்றுக் கொள்வதையும் பிராந்திய முகாமையாளர் ஜெயவீரசிங்க, வேலணை மத்திய கல்லூரி அதிபருக்கு நினைவுப் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம். படங்கள் (போட்டோ ரவி-யாழ்)


**பொம்மேரியனைக் காணவில்லை**

கடந்த 24/10 ஞாயிறன்று அதிகாலை 4-5 மணியளவில் யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்குமிடையில் வாலில் காயம்(புண்) உள்ள சுகவீனம் உற்ற நிலையில் உள்ள வெண்நிற பொம்மனேரியன் இன நாயைக் காணவில்லை.இது பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் மிகவும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். (சன்மானமும் செலவீனமும் வழங்கப்படும்)

0774290859 / 0212228244 (2743)

**தவறிவிட்டது**

சிவன் கோவிலடி வட்டு.வடக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பாலசிங்கம் சிறிஸ்கந்தன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் A.D தரம் காணவில்லை.இதனைக் கண்டெடுத்து மேற்படி விலாசத்தில் ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த "சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

0778332954 (2744)

**சித்திர வகுப்பு**

2012 A/L

இன்று பி.ப. 4.00

புதிய பிரிவு ஆரம்பம்

IAT சித்திரப் பயிற்சி நிறுவனம் ஆத்திசூடி வீதி,கந்தர்மடம்.

(இந்து மகளிர் கல்லூரி அருகில்) (2740)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனத்திற்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு :-

(C-1384) 0729994777

**காணி வீடு விற்பனைக்கு**

கச்சேரிக்கு வடக்குப் பக்கமாக யாழ்.கண்டி வீதிக் கருகாமையில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் 3 பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு:-

தொ.பே:-0214916709

தரகர் இல்லாமல் நேரில் தொடர்பு கொள்ளவும். (2731)

**செல்லா சினிமா**

பசங்களுக்கு ஜாலியான படம்

காட்சி நேரம் 10.30 ,2.30 ,6.30




# இன்று ஒரு தகவல்

## புத்திக்கூர்மை

''கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு''என்று ஒரு பெரியவர் புத்தி சொன்னார்.

அதைக் கேட்ட ஒரு சின்னப்பையன்,''அது எப்படி பெரியவரே,புத்தியைத் தீட்டுவது? கத்தியைத் தீட்டு என்றால் ஒரு கல்லில் கத்தியைத் தேய்க்கலாம். புத்தியைத் தீட்டு என்றால் தலையைக் கொண்டுபோய் தரையில் தேய்த்துக் கொண்டிருக்க முடியுமா? என்றான்.

பெரியவர் உடனே,'இந்தப் பையனுக்கு புத்திக் கூர்மை குறைவு'என்று உணர்ந்து கொண்டார்.

அதுசரி,அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வித்தியாசம்? இது ஒரு முக்கியமான கேள்வி. இதே கேள்வியை சாக்ரடீஸ்சிடம் அவருடைய சிஷ்யன் ஒருத்தன் கேட்டான். சாக்ரடீஸ் நிமிர்ந்து சிஷ்யனைப் பார்த்தார். அதற்குப் பின் சொன்னார்.

''இதற்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முதல் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்''என்றார்.

''என்ன செய்ய வேண்டும்? என்று சொல்லுங்கள்'' என்றான்.

''அதோ பார்! அங்கே வயதான பெரியவர் ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். நேராக அவரிடம் போ. இங்கிருந்து அருகிலிருக்கும் கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரமாகும்? என்று அவரிடம் கேட்டுக் கொண்டு வா'' என்றார் சாக்ரடீஸ்.

சரி என்று சொல்லிவிட்டு அந்தப் பெரியவரிடம் போனான் அவன்.

அவரிடம்,''பெரியவரே,இங்கிருந்து பக்கத்திலுள்ள கிராமத்துக்குப் போய்ச்சேர எவ்வளவு நேரம் எடுக்கும்''? என்று கேட்டான்.

பெரியவர் நிமிர்ந்து பார்த்தார். ஆனால் பதில் எதுவும் சொல்லவில்லை. இந்த சிஷ்யன் மறுபடியும் இந்தக் கேள்வியைக் கேட்டான். அப்பொழுதும் அவர் பதில் சொல்லவில்லை.

''சரி,பெரியவர் ஒரு மாதிரியாக தெரிகிறார். புத்தி சுவாதீனம் இல்லாதவர் போலிருக்கிறது''என்று நினைத்துக் கொண்டு வந்த வழியிலேயே திரும்பி நடந்தான்.

சிறிது தூரம் வந்தவுடன் அந்தப் பெரியவர் இவனைக் கூப்பிட்டார்.

''நீ இங்கிருந்து பக்கத்திலுள்ள கிராமத்துக்குப் போய்ச் சேர 5 நிமிடமாகும்''என்றார்.

இப்பொழுது சிஷ்யன் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான். அதன்பின் யோசித்தான். பின் அவரிடமே கேட்டான்.

''பெரியவரே , இந்தப் பதிலை திரும்பிப் போகவிட்டு அதன் பின் கூப்பிட்டு சொல்கிறீர்களே'' என்றான்.

''பெரியவர் சிரித்தார். அதற்குப்பின்,''ஏனப்பா... நீ எவ்வளவு வேகமாக நடக்கிறாய் என்பதைப் பார்க்காமல் எப்படி நீ கிராமத்துக்குப் போய்ச்சேரக் கூடிய நேரத்தைச் சொல்ல முடியும்? அதனால்தான் உன்னை நடக்கவிட்டு வேகத்தைப் பார்த்து அதன்பின் நேரத்தைச் சொன்னேன்''என்றார். சிஷ்யனால் பதிலெதுவும் சொல்ல முடியவில்லை. திரும்பி சாக்ரடீஸ்சிடம் வந்து நடந்ததைச் சொன்னான்.

''அதற்குப் பெயர்தான் புத்திசாலித்தனம்''என்றார் சாக்ரடீஸ். இந்தப் புத்திசாலித்தனம் எல்லோருக்கும் வர வேண்டும் என்பதற்காகத்தான்'கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு'என்று பெரியவர்களெல்லாம் புத்திமதி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அதையெல்லாம் இந்தக் காலத்தில் யார் கேட்கிறார்கள்?

இந்தக்கால ஆசாமி ஒருத்தர் இன்னொருவரைப் பார்த்துக் கேட்டார்.

''ஏங்க?ஒருவிமானம் இங்கிருந்து புறப்பட்டு 2 மணிநேரத்தில் மதுரைக்குப் போய் சேருகிறது. அப்படியானால் என்னுடைய வயதென்ன?''என்றார்.

இது என்ன கேள்வி? இருந்தாலும் இதைக் கேட்டவுடன் அவர் பதில் சொன்னார்.

''அப்படியானால் உங்களுடைய வயது இருபது''என்றார்.''எப்படி இவ்வளவு கரெக்டா சொல்கிறீர்கள்?'' என்றார் இவர்.

''வேறொன்றுமில்லை. எங்களுடைய பக்கத்து வீட்டில் முழுப் பைத்தியம் இருக்கிறது. அதனுடைய வயது 40.''என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அகதிகள் குறித்த கனேடிய குடிவரவு சட்டமூலம் வலுவிழக்கும் சாத்தியம்

இலங்கை அகதிகளுக்கு எதிராக கனடாவில் முன்வைக்கப்பட்டுள்ள புதிய குடிவரவு சட்டமூலத்துக்கு அந்த நாட்டின் எதிர்க் கட்சிகள் ஆதரவளிக்காமல் விடலாம் என கனேடிய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஏற்கனவே இந்த சட்டமூலம், பாதிக்கப்பட்டவர்களை தண்டித்து, குற்றவாளிகளை விடுவிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக தொரன்டோ சன் குற்றம் சுமத்தியிருந்தது.

இந்த நிலையில் சுதந்திர குடிவரவுத்துறை விமர்சகரான ஜஸ்டின் ட்ருடியா சி.சி.டி தொலைக் காட்சிக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் இந்த சட்டமூலம் குறித்து விளக்கமளித்துள்ளார்.

இந்தச் சட்ட மூலத்தின் மூலம், இலங்கையில் இருந்துவரும் அகதிகள் நேரடியாகப் பாதிப்படைவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில்,,தாம் கவலையடைவதாகவும், அகதிகள் இவ்வாறு தண்டிக்கப்படுவதால், ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கடத்தல்காரர்கள் நிறுத்தப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கனடாவின் புதிய ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் போல் தேவரும், இந்த சட்ட மூலத்துக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

அகதிகள், ஆட்கடத்தல்காரர்களால் அனுப்பிவைக்கப்பட்டவர்கள் மற்றும் சுயமாக வரும் அகதிகள் என இரண்டு வகுப்புகளாக பார்க்கப்படுவது பிழையானது என அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையில் அகதியாக ஒருவர் கருதப்பட வேண்டுமானால், அவர் தமது நாட்டில் தமது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது என்பதை நிரூபிக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தமிழகத்திலிருந்து 2350 இலங்கை அகதிகள் நாடு திரும்பியுள்ளனர்

## ஐ.நா. அலுவலகம் தகவல்

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளில் 2 ஆயிரத்து 350 பேர் தாயகம் திரும்பி இருப்பதாக அகதிகள் மறுவாழ்வுக்கான ஐ.நா ஆணையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே கடந்த சில ஆண்டுகளாக தீவிர சண்டை நிகழ்ந்தபோது அங்கிருந்த தமிழர்கள் பலரும் வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்தனர்.

கடந்த ஜூலை மாத நிலவரப்படி ஒரு இலட்சத்து 4 ஆயிரம் பேர் தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்தமடைந்துள்ளனர். இவர்களில் சுமார் 71 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெவ்வேறு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இலங்கையில் போர் முடிவடைந்துவிட்ட நிலையில் கடந்த ஜனவரி முதல் செப்டெம்பர் மாதம் வரையிலான 9 மாதங்களில் ஆயிரத்து 280 பேர் தமிழகத்தில் இருந்து இலங்கை திரும்பியுள்ளதாகவும் அவர்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் தாங்கள் செய்துள்ளதாகவும் ஐ.நா அலுவலக அதிகாரி ஒருவர் கூறினார்.

மேலும் , கடந்த ஒரு மாத காலத்தில் சுமார் ஆயிரம் பேர் தங்களது தாயகம் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

*26.10.2010*
*(ஐப்பசி 09, செவ்வாய்க்கிழமை)*
*திருதியை முற்பகல் 9.17 மணிவரை*
*ரோகிணி பின்னிரவு 1.39 மணிவரை*
*இராகுகாலம் 3.03-4.33 மணிவரை*
*சுபநேரம் 10.33-12.03 மணிவரை*
*சங்கடகர சதுர்த்தி விரதம், அமிர்த சித்தம்.*

**மேடம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், அடிப்படை வசதிவாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர்.

**இடபம்** குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துணிவுடன் செயற்படுவீர்கள், மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்** கணபதி வழிபாட்டால் திருப்திகாண வேண்டிய நாள், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது,இடமாற்றம், ஊர் மாற்றம் செய்யும் எண்ணத்தை தவிர்ப்பீர்கள்.

**கடகம்** கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், நீண்ட தூரம் பயணம் செய்ய போட்ட திட்டம் நிறைவேறலாம், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகை வந்து சேரும், வருமானம் திருப்திகரமாக அமையும்.

**சிங்கம்** தொட்ட காரியம் துளிர்விடும் நாள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், துடிப்பாக செயற்பட்டு பலரது பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வெளிநாட்டுத் தொடர்பு விருத்தியாகும்.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு அதிகரிக்கும் நாள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், தொழிலில் ஏற்பட்ட போட்டிகள் மாறும், தந்தைவழியில் தனலாபம் உண்டு.

**துலாம்** வரவும்,செலவும் சமனாகும் நாள், வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது, கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், உத்தியோக நலன்கருதி எடுத்த முயற்சி தாமதமாகும்.

**விருச்சிகம்** உறவினர் வருகையால் உற்சாகம் அடையும் நாள், தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், சென்ற இடத்தில் செல்வாக்குண்டு, வருமானம் திருப்திகரமாக அமையும்

**தனுசு** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு உறுதுணையாக செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,பகைவர்கள் உங்களை விட்டு விலகுவர்.

**மகரம்** பிள்ளைகளால் பெருமையான செய்திகள் வந்து சேரும் நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், வரவேண்டிய தொகைகள் வந்து சேரலாம்.

**கும்பம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், புண்ணிய காரியங்களுக்காக செலவிட்டு மகிழ்வீர்கள், பெற்றோர் வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், அஞ்சல் வழித் தகவல் ஆச்சரியப்பட வைக்கும்.

**மீனம்** உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள், வரவு திருப்தி தரும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், பிரயாண அனுகூல முண்டு, விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

வளவன்

# கும்பாபிஷேகம்

(சித்தங்கேணி)

சித்தங்கேணி தனுவோடைப்பதி ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் சிவ சிதம்ப ரேஸ்வரப் பெருமாள் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடை பெறவுள்ளது.

அத்துடன் 28 ஆம்திகதி வியாழக் கிழமை காலை 9மணிக்கு பாவனா அபி ஷேகமும் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

(ஸ்ரீ-17)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | -- | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 90 |
| தக்காளி | 60 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 70 | 80 | 70 |
| கரட் | 60 | 100 | 60 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 70 |
| பாகற்காய் | 160 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 90 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 100 | 120 | 50 |
| முருங்கைக்காய் | 140 | 140 | 100 |
| போஞ்சி | 140 | 150 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 40 |





கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் சிறுவர் தினம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவிகளின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா உரையாற்றுவதையும் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கரவெட்டி செய்தியாளர்)

## வாணி விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய வாணிவிழாவும் பரிசில் தினவிழாவும் நாளை மறுதினம் மாலை 3.30 மணிக்கு வித்தியாலய கலையரங்கில் அதிபர் ச.சத்திய வரதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி இராதா கிருஷ்ணன், சிறப்பு விருந்தினர்களாக திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.யோண் குயின்ரஸ் மற்றும் நெடுந்தீவு வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி நன்னித்தம்பி மகேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக, தீவகக் கல்வி வலய கணக்காளர் எஸ்.பரதன் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவு பிரிவுத் தலைவர் எ.அருந்தவசீலன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். அத்துடன் பேச்சு, கும்மி, நாடகங்கள், பரிசளிப்பு வைபவம் என்பன நடைபெறும். (ஸ்ரீ-2)

## குடியியல் பாட செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளில் தரம் 10 , 11 வகுப்புகளில் குடியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் உள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறுமென வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-19)

## கரவெட்டி அஞ்சலதிபர் இன்றுடன் ஓய்வு

கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் பொறுப்பு அஞ்சலதிபராக கடமையாற்றிய ரங்கநாதன் விநாயகநாதன் இன்று ஓய்வு பெறுகிறார்.

இதனையடுத்து நாளை புதன்கிழமையிலிருந்து அருமைத்துரை அருளானந்த சோதி கரவெட்டி அஞ்சலகத்தில் பொறுப்பு அஞ்சலதிபராக கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார். (ஸ்ரீ-2-19)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரால் மின் பாவனையாளர்கள் பெரும் சிரமம்

(பருத்தித்துறை)

வடமராட்சியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களால் மின்பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பகுதியில் மாலை வேளையில் சட்ட விரோதமாக மின்சாரம் பெறப்படுவதால் இரவு வேளைகளில் மின்வலுக் குறைவடைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சட்டவிரோத மின்சாரம் பெறுபவர்கள் சிலர் மின்தாக்கத்திற்கு உள்ளாகியதால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

எனவே இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கூடிய கவனம் செலுத்தி சட்ட விரோதமாக மின்சாரம் பெறுபவர்களை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என மின்பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2-10)

## இலவச நடமாடும் சேவையும் சட்ட ஆலோசனை நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட (யு.என்.டி.பி) நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத் திட்டத்தின் அனுசரணையுடன் பிறப்பு, இறப்பு, திருமணம், மரணம், காலந்தாழ்த்திய பிறப்பு மற்றும் தேசிய அடையாள அட்டை போன்ற சட்ட ஆவணங்களை வழங்குவதற்கான நடமாடும் சேவை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதேவேளை சட்ட ஆவணங்கள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கும் நிகழ்வு வசாவிளான் கிழக்கில் அமைந்துள்ள சுதந்திரபுரக் கிராமத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

மேலும், இதில் தேசிய அடையாள அட்டைகளுக்கான புகைப்படம் மற்றும் சட்ட ஆவணங்களுக்கான முத்திரைகள் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளன.

அத்துடன் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இந்தியாவில் பிறந்த பிள்ளைகளுக்கான பிரஜாவுரிமைப் பத்திரங்களை வழங்குவதற்கான நடமாடும் சேவை நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வுகளில் அந்தந்தப் பிரதேச மக்களை கலந்துகொண்டு சட்ட ஆவணங்கள் தொடர்பான தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுமாறு நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத் திட்டத்தின் வட மாகாண கருத்திட்ட உத்தியோகத்தர் மொகமட் சியாத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




## ஆங்கிலப் பயிற்சி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் வெளிச்சவீடு பாடசாலை அலகு தரம் 11 மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி பரீட்சையினை யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடாத்தவுள்ளது.

இதற்கமைய யாழ். கோட்டப் பாடசாலைகள் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் நல்லூர் மற்றும் கோப்பாய் கோட்டப் பாடசாலைகள் தத்தமது கோட்ட அலுவலகங்களிலும் வினாத்தாள் பொதிகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் எம்.மகேந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய நூற்றாண்டு விழாவும் பாடசாலை வரலாற்று நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் கலந்துகொள்கிறார்.

வரலாற்று நூல்வெளியீட்டை பிரதம விருந்தினர் வெளியிட்டு வைக்க சிறப்புப் பிரதியை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் க.லலீசன் பெற்றுக்கொள்வார். (ச-2)

## ஊழியர் நலன்புரின் சங்க பொதுக்கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி வலய ஊழியர் நலன்புரிச் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவும் நாளை புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வடமராட்சி வலய கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவில் வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தருமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2-19)

## சுப்பர்மடம் மயானம் விரைவில் புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலுள்ள சுப்பர்மடம் மயானம் விரைவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக அம்மாயனத்தின் சுற்றுமதில் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை இம் மயானப் புனரமைப்புக்கான நிதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-10)

## வாதரவத்தையில் தரவை கற்கள் அகழ்வதற்குத் தடை விதிப்பு

(பருத்தித்துறை)

புத்தூர் வாதரவத்தை கிராமப் பகுதியில் தரவைக் கற்கள் அகழ்வதற்கும் அதனை வாகனங்களில் ஏற்றிச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதியில் பொலிஸார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி வருகின்றனர். தரவைக் கற்கள் ஏற்றிச் சென்ற ஒரு சில வாகனங்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

அதேவேளை வாதரவத்தை கப்புதூ வீதியில் கசிப்பு வடிப்போர் மீதும் பொலிஸார் கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

கசிப்பு வடிப்போர் பிடிக்கப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2-10)


## தரிசு நிலங்களில் பயன்தரு — மர நடுகைத் திட்டம் —

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகப் பகுதியில் அல்லைப்பிட்டி முதல் மண்கும்பான் வீதியின் வடபுறமாக தரிசுநிலமாகக் காணப்படும் பாரிய நிலப் பகுதியில் பயன்தரு மரநடுகைத் திட்டத்தை ஆரம்பிப்பது குறித்து பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோர் நேரடியாக ஆராய்ந்தனர்.

இத் திட்டத்தினை விரைவிலேயே ஆரம்பிப்பதெனவும் வேலணை பிரதேச செயலகம், வேலணை பிரதேச சபை மற்றும் பொது மக்கள் ஆகியோரின் பங்களிப்புடனும் வட மாகாண சபையின் ஒத்துழைப்புடனும் இப் பாரிய மர நடுகைத் திட்டத்தினை மேற்கொள்வதென பூர்வாங்கமாகத் திட்டமிடப்பட்டுள்ளது. (ச)






சம்பத் வங்கியின் 164ஆவது கிளைத் திறப்பு விழா சங்கானையில் நேற்று இடம்பெற்றது. இதில் கூட்டுவங்கிச் சேவையின் பிரதிப் பொதுமுகாமையாளர் சமன்ஹேரத் திறந்து வைத்து உரையாற்றுவதையும் அருகில் பிரதம முகாமையாளர் (வைப்பு) மோகன திஸ நாயக்க காணப்படுவதையும்,முதலாவது வைப்புப்பணம் பெறப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-போட்டோ ரவி (யாழ்)

## சடலத்தை பொறுப்பேற்க கோரிக்கை

யாழ்.போதனா வைத்தியசாலையில் அடையாளம் காணப்படாத சடலம் ஒன்று ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் இச்சடலத்தை எவரும் உரிமை கோராது இருப்பதால் , உரியவர்கள் மூன்று தினங்களுக்குள் பொறுப்பேற்கும்படி யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ச-2)

## கூட்டு பஸ் கம்பனி அமைக்க தீர்மானம்

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் ஆகியன இணைந்து அடுத்த வருடத்திலிருந்து கூட்டு பஸ் கம்பனியொன்றை உருவாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் ஏற்கனவே இத்திட்டத்தை அங்கீகரித்துள்ளதாகவும் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் அதை உள்ளடக்குமாறு ஆலோசனை கூறுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அடுத்த வருடம் தனி நபர் கடன் தொகை 2 இலட்சத்து 50 ஆயிரமாக அதிகரிக்கும்

## விஜிதஹேரத் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியை விட தற்போது நாட்டின் பொருளாதாரம் படுமோசமான அளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. முன்வைக்கப்பட்டுள்ள வரவு -செலவுத்திட்ட பிரேரணையில் அரசாங்கம் அடுத்த ஆண்டில் 99ஆயிரத்து 780 கோடி ரூபாவை கடனாகப் பெற உத்தேசித்துள்ளது.

இதனால் அடுத்த ஆண்டில் தனி நபர் கடன் தொகை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பி.யின். தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விஷேட செய்தியாளர் மாநாட்டின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளரும் ஜனநாயக தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் கூறுகையில்,

நாட்டில் யுத்தம் நிலவிய காலப்பகுதியில் உள்நாட்டுப் பொருளாதாரம் பல வழிகளில் பின்னடைவைச் சந்தித்தது. ஆனால் , தற்போது யுத்தம் முடிவடைந்து 17 மாத காலம் ஆகியுள்ள நிலையில் நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தியடையாமல் முன்பை விட படுமோசமான பின்னடைவையே சந்தித்துள்ளது.

இதன் ஊடாக அரசாங்கத்தின் இயலாமையும் நேர்த்தியான பொருளாதார திட்டங்கள் இன்மையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அரசாங்கம் முன்வைத்துள்ள அடுத்த ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட பிரேரணையில் சம்பள உயர்விற்கோ மக்களுக்கான நிவாரணங்களுக்கோ நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

எனவே, இம்முறையும் பொதுமக்கள் ஏமாற்றமடையும் நிலையே உள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டில் 40 ஆயிரத்து 213 கோடி ரூபாவாகக் காணப்பட்ட தேசிய கடன் கடந்த நான்கு வருடத்தில் அதாவது கடந்த 2009 இல் 99 ஆயிரத்து 962 கோடி ரூபாவாக அதிகரித்தது.

பொருளாதார அபிவிருத்தியின் அளவீடாக தேசிய கடன் முக்கிய பங்கை வகிக்கின்றது.

தனி நபர் கடன் தொகை கடந்த 2005 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 12 ஆயிரம் ரூபாவாக காணப்பட்ட போதிலும் நாட்டின் மொத்த சனத்தொகையில் 41.6 வீதமானோர் இரண்டு பொலர்களை அதாவது 230 ரூபாவை நாள் சம்பளமாகப் பெற முடியாதவர்களாக உள்ளனர்.

அடுத்தாண்டில் தனி நபர் கடன் தொகை இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்தை எட்டுமேயானால் நாடு பாரிய வறுமையை நோக்கி பின் தள்ளப்பட்டுகின்றது என்றே அர்த்தப்படும் எனக் கூறினார். (ஸ்ரீ-2)


## நன்றி நவிலலும் பாராட்டுக்களும்

### திரு.சீ.ஏ. மோகன்றாஸ் அவர்கள்

( மேலதிக அரச அதிபர், முல்லைத்தீவு )



செம்புல மண்ணின் சேவை
செம்மையாய்ச் செய்தீர் நன்றி
நம்புல நீர்வைப் பதியார்
நாளுமே நெஞ்சில் கொள்வோம்
உம்புல மேன்மை கண்டோம்
உவகை பல்கோடி கொண்டோம்
நும்பணி தொடர்க நீடு
நுவல் கிறோம் வாழ்த்தி நாமே.

எமது கோப்பாய் பிரதேச செயலராக அரும்பணியாற்றி நீர்வை மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்த திரு.சீ.ஏ.மோகன்றாஸ் அவர்களின் சேவைகளுக்கு நன்றி கூறுவதுடன் அவர் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபராகப் பதவிஉயர்வு பெற்றமையையிட்டு எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*நீர்வேலி மக்கள்*

(சி-1465)



## அதிகம் சேமித்து அதிகம் வெல்லுங்கள்




சுப்பர் சீட்டிழுப்பு

2 வருடத்திற்கான இலவச பெற்றோலுடன் சுசூக்கி A-ஸ்டார் கார் ஒன்றை வெல்லுங்கள்

மாதாந்தச் சீட்டிழுப்பில் தங்க நாணயங்களை வெல்லுங்கள்

காலாண்டுச் சீட்டிழுப்பில் உங்கள் கணக்கு மீதி இரு மடங்காக்கப்படும்

சீட்டிழுப்பிற்குத் தகுதி பெற, ஒரு மாதத்திற்காவது உங்கள் சேமிப்புக் கணக்கில் ரூ.10,000ஐ அல்லது நடைமுறைக் கணக்கில் ரூ.5,000ஐ மீதியாக வைத்திருங்கள். அதிகமாகவும் நீண்ட காலத்திற்கும் சேமித்தால், வெற்றி வாய்ப்புக்கள் அதிகமாகும்.

ULTRASAVER
சேமிப்புகளுக்கு ஆகக்கூடிய வட்டி வீதம்

யூனியன் வங்கி
15ஏ, அல்பிரட் பிளேஸ், கொழும்பு 03. Tel: (011) 2370870 www.unionb.com

# இந்தியாவில் விடுதலைப்புலிகளின் தடையை நீக்க சட்ட ரீதியாக முயற்சி

இந்தியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கும் நோக்கில் அரசியல் தலைவர்கள் பலர் சட்ட ரீதியான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தென்னிந்தியாவில் உள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் இதற்கான முயற்சிகளை கொண்டுவருவதாகவும் இதன் அடிப்படையில் நீதிபதி விக்ரமஜித் தலைமையிலான மக்கள் நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. இதில் இந்த விடயங்கள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது இந்தியா கடந்த 1991ஆம் ஆண்டு தடை விதித்தது. அந்த தடையை நீக்குவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இம் மக்கள் நீதிமன்றம் ஆராய்ந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகள் இந்தியாவுக்கு அச்சுறுத்தலானவர்கள் இல்லை எனவும் அவர்கள் வாதிட்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-2)

# இராணுவ மைதானத்தில் ஐந்து நட்சத்திர விடுதியை அமைக்கும் சீன நிறுவனம்

கொழும்பு காலி முகத்திடலை ஒட்டிய இராணுவ மைதானத்தில் இலங்கை அரசாங்கம் சீன அரசாங்கத்துக்கு விற்கவிருப்பதாக உள்நாட்டு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சங்க்ரி லா என்ற இந்த சீன நிறுவனத்தின் உரிமையாளர் கோக் கூன் ஈன் கடந்த ஓகஸ்ட் 18ஆம் திகதி இலங்கை வந்து இது தொடர்பில் அரசாங்கத்துடன் பேசியுள்ளார்.

இந்த வேலைத்திட்டம் குறித்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அண்மையில் அமைச்சரவையில் விளக்கமளித்ததைத் தொடர்ந்து அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியில் இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. ஐந்து நட்சத்திர விடுதியொன்றைக் கட்டுவதற்காக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த நிலையில் இதனை மைதானமாக பாவித்த இராணுவத்தினருக்கு மாற்று காணியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சங்க்ரி லா நிறுவனம் உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளில் 60க்கும் அதிகமான5 நட்சத்திர விடுதிகளை கொண்டுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது. (ஸ்ரீ-2)

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

## 2011 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2011 ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 10.11.2010 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணி வரை நல்லூர் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ் குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 09.11.2010 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச் சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றிற்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா1,500,000.00 இற்கும் ரூபா 200,000 குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் சந்தைக்குரிய கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியையும் இறைச்சிக் கடைகளிற்குரிய கேள்விக்காரர் கேள்வித் தெகையின் 2/3 பகுதியையும் 24.11.2010ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2011 ஆம் ஆண்டு சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 9,900,000.00 |
| 2. | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 176,000.00 |
| 3. | திருநெல்வேலிச்சந்தை கோழி இறைச்சிக் கடை இல:1 | 500.00 | 5,000.00 | 100,100.00 |
| 4. | திருநெல்வேலிச்சந்தை கோழி இறைச்சிக் கடை இல:2 | 500.00 | 5,000.00 | 100,100.00 |
| | **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1. | கொக்குவில் குளப்பிட்டி சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 515,901.00 |
| 2. | கொக்குவில் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 93,830.00 |
| 3. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 114,620.00 |
| 4. | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 331,485.00 |
| 5. | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 39,600.00 |
| 6. | கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறி சந்தையும் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 92,400.00 |
| 7. | கொக்குவில் உப அலுவலக இல 329, பலாலி வீதி, ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 137,043.00 |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
21.10.2010

(சி-1464)

மே.சாந்தசீலன்,
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

# இலங்கைக்குக் கடத்த முயன்ற கடலட்டை பறிமுதல்

இலங்கைக்கு கடத்த முயன்ற 550 கிலோ கடல் அட்டைகளை தமிழக வனத்துறையினர் பறிமுதல் செய்தனர்.

ஜப்பான், தாய்வான், மலேசியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளில் கடல் அட்டைகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. இந்தியா வில் கடல் அட்டைகளைப் பிடிக்கவும் ஏற்றுமதி செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிலர் கடல் அட்டைகளை இலங்கை வழியாகக் கடத்துகின்றனர். வனத்துறையினர் அவ்வப்போது திடீர் சோதனை நடத்தினாலும் கடல் அட்டை கடத்தல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மண்டபம் வனத்துறையினர் நேற்று முன்தினம் வடக்கு கடல் பகுதியில் வந்த வாகனத்தை சோதனையிட் டதில் 250 கிலோ கடல் அட்டைகள் சாக்குகளில் கட்டப்பட்டு இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அவற்றை பறிமுதல் செய்த அவர்கள் பனைக்குளத்தைச் சேர்ந்த சாரதியான காஜா மைதீன் வயது 21 என்பவரை கைது செய்தனர். அதே போன்று வேதாளை பகுதியில் வானில் கடத்தப்பட்ட 300 கிலோ கடல் அட்டைகளைப் பொலிஸார் பறிமுதல் செய் தனர். இதில் வான் சாரதி தப்பி ஓடி விட்டார்.


(ஸ்ரீ-2)

# பரந்தனில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

பரந்தன் பிரதேசத்தில் கூட்டுறவு விற்பனை நிலையம் ஒன்றின் களஞ்சிய சாலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்களை கிளிநொச்சி விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர். குறித்த ஆயுதங்கள் பரந்தன்-முல்லைத்தீவுக்கான ஏ-35 பாதையின் புளியம்பொக்கணை கூட்டுறவு நிலைய களஞ்சிய சாலையில் பூமிக்கடியிலான நீர்த்தாங்கிக்குள் பத்திரமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்டுள்ள ஆயுதங்களில் பல்வேறு வகையான கைக்குண்டுகள் 51 ,அமுக்க வெடிகள் 5,யுத்த டாங்கி எதிர்ப்பு ஆர்.பி.ஜி. மோட்டார்குண்டுகள் 19, மில்லி மீற்றர் 60 மோட்டார் குண்டுகள் 10 என்பவற்றுடன் தன்னியக்க துப்பாக்கி ரவைகள் 2ஆயிரத்து 135 ,ரி 56 துப்பாக்கிகான தோட்டாக்கள் 9 ஆயிரத்து 56, எம்.16 தோட்டாக்கள் 20 மற்றும் 5 ரான்ஸ்மீற்றர்கள் ,ஆர்.பி.ஜி.சார்ஜர்கள் 43 உட்பட இன்னும் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பயங்கரவாதம் இல்லாத (?) நாட்டில் பாதுகாப்பு செலவினம் அதிகரிப்பு!





ஜெகத் ஜெயசூரிய

உலகில் பரப்பளவு ரீதியாக 121 ஆவது இடத்தில் உள்ள நாடு இலங்கை. ஆனால் பாதுகாப்புக்காக அதிகம் செலவிடும் நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு 60 ஆவது இடம்.

இது 2009 ஆம் ஆண்டு புள்ளி விபரங்களின் அடிப்படையிலான நிலைமை. அடுத்த வருடம் இலங்கை இந்தப் பட்டியலில் மேலும் முன்னேற்றம் காணப்போகிறது.

2009 ஆம் ஆண்டை விடவும் 2010 ஆம் ஆண்டில் இலங்கையின் பாதுகாப்புச் செலவு 2 ஆயிரத்து 500 கோடி ரூபாவினால் அதிகரித்திருந்தது.

அடுத்த வருடம் பாதுகாப்புச் செலவு ஆயிரத்து 300 கோடி ரூபாவினால் அதிகரிக்கப் போகிறது. இந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கையின் பாதுகாப்புச் செல்வினம் கிட்டத்தட்ட 3ஆயிரத்து 800 கோடி ரூபாவினால் அதிகரிக்கின்ற நிலையில், இந்தப் பட்டியலில் இலங்கை மேலும் முன்னேறும் வாய்ப்புகள் அதிகம்.

உலகில் பரப்பளவு ரீதியாக 121 ஆவது இடத்தில் இருக்கும் இலங்கை, பாதுகாப்பு செலவின் அடிப்படையில் தன்னை விடவும் பெரிதான சுமார் 60 நாடுகளை முந்திக் கொண்டு முன்னே வந்துநிற்கிறது.

அதைவிட, 2009 ஆம் ஆண்டு பாதுகாப்பு செலவினம் மற்றும் 2008 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் - இலங்கை பாதுகாப்புக்காக அதிகம் முன்னணி நாடுகளில் ஒன்றாகியுள்ளது.

இலங்கை 2008ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.6 சதவீதத்தை பாதுகாப்புக்காகச் செலவிட்டுள்ளது. ஆனால் உலகில் முதல் நிலை வல்லரசான அமெரிக்காவோ மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.3 சதவீதத்தைத் தான் பாதுகாப்புக்காக ஒதுக்கியுள்ளது.

இலங்கைக்கு முன்னே உள்ள 59 நாடுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.6 சதவீதத்துக்கும் அதிகமான நிதியைப் பாதுகாப்புக்காகச் செலவிடும் நாடுகள் வெறும் எட்டே எட்டுத்தான். ஆக, உலகில் பாதுகாப்புக்காக அதிக நிதியையும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக சதவீதத்தையும் பாதுகாப்புக்கு ஒதுக்கும் முன்னணி பத்து நாடுகளை வரிசைப்படுத்தினால் இலங்கைக்கு ஒன்பதாவது இடம் கிடைக்கும்.

இந்தப் பட்டியலில் இந்தியா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா போன்ற முன்னணி நாடுகள் கூட இடம் பிடிக்காது.சின்னஞ் சிறிய இலங்கைத் தீவு பாதுகாப்புக்காக எவ்வளவு நிதியை செலவிடுகிறது என்பதைத் தெளிவுபடுத்த இது போதுமானது.

2011 ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு 21 ஆயிரத்து 521 கோடியே 96 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்படவுள்ள நிதியில், இராணுவத்துக்கு அதிகபட்சமாக 10ஆயிரத்து 929 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

கடற்படைக்கு 3ஆயிரத்து 66 கோடி ரூபாவும், விமானப்படைக்கு 2ஆயிரத்து 69 கோடிரூபாவும், பொலிஸ் திணைக்களத்துக்கு 3ஆயிரத்து 437 கோடி ரூபாவும், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு 877 கோடி ரூபாவும், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு 11 கோடி ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன.

2011ஆம் ஆண்டில் பாதுகாப்புக்காக அதிக நிதி ஒதுக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதற்கு சர்வதேச நாணய நிதியம் அதிருப்தி தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

போர் முடிவுக்கு வந்த பின்னர், பாதுகாப்புச் செலவினம் குறைந்துவிடும் என்று எதிர்பார்த்த நாட்டு மக்களுக்கும் சரி, வெளிநாட்டு நிதி நிறுவனங்களுக்கும் சரி இது அதிர்ச்சியான செய்தியாகவே அமைந்துள்ளது.

## போர் என்ற சகதிக்குள் இருந்து மீள முடியாத நிலையில் அரசு

### போர் முடிந்தாலும் செலவு அதிகம்

போர் முடிவுக்கு வந்தால் சரி, அதற்குப் பின்னர் அதன் சுமையை நாட்டு மக்கள் சுமக்க வேண்டியிருக்காது என்ற கருத்தை அரசாங்கம் ஏற்கனவே ஏற்படுத்தி வைத்திருந்தது. அந்த எதிர்பார்ப்பு உடைந்துபோனதே இந்த அதிர்ச்சிக்கான காரணம்.

2010 இல் பாதுகாப்பு அமைச்சின் மூலதனச் செலவுக்கு ஆயிரத்து 93 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. அது அடுத்த வருடம் ஆயிரத்து 321 கோடி ரூபாவாக அதிகரிக்கப் போகிறது. 2010 இல் 19ஆயிரத்து 129 கோடி ரூபாவாக இருந்து பாதுகாப்பு அமைச்சின் மீண்டெழும் செலவினம், அடுத்த ஆண்டில் 20ஆயிரத்து 200 கோடி ரூபாவாக அதிகரிக்கிறது.

இந்தக் கட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதற்கு அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல ஒரு காரணம் கூறியிருக்கிறார்.

“வடக்கில் போர் இறுதிக் கட்டத்தை அடைந்து கொண்டிருந்தபோது பெருந்தொகையான பல்குழல் பீரங்கிகள் தேவைப்பட்டன. அவை சில குறிப்பிட்ட நாடுகளிடம் இருந்து நட்புறவு அடிப்படையில் வாங்கப்பட்டன. தொலைபேசியில் கொள்வனவுக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு வாங்கப்பட்ட பல்குழல் பீரங்கிகள் போன்ற ஆயுதங்களுக்கான பணத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. அதனால் தான் பாதுகாப்புச் செலவு அதிகரித்துள்ளது....” என்று அவர் கூறியிருந்தார்.

போர் முடிவடைந்தாலும் ஆயுதங்களை வாங்குவதற்காகப் பட்ட கடனை அடைப்பதற்கு அதிகம் நிதி ஒதுக்க வேண்டியுள்ளது என்பதே அவரது வாதம்.

ஆனாலும், 2010 ஆம் ஆண்டை விட, 2011 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு அமைச்சின் மூலதனச் செலவு 228 கோடி ரூபாவினால் அதிகரித்திருக்கிறது.இது பட்ட கடனை அடைப்பதற்கானது அல்ல -வாங்கப் போகும் ஆயுதங்கள் போன்ற சொத்துக்களுக்கானது.

### இருப்பதைக் கொண்டு சமாளிக்கலாம்

அண்மையில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய அளித்திருந்த பேட்டி ஒன்றில்,‘ தற்போது எந்தத் தீவிரவாத அச்சுறுத்தலும் இல்லையென்பதால் புதிதாக எந்த நவீன ஆயுதங்களையோ, கருவிகளையோ கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.தற்போதுள்ள ஆயுதங்களைக் கொண்டே உள்நாட்டு நெருக்கடிகளைச் சமாளிக்கலாம்” என்று கூறியிருந்தார்.

கே.சஞ்சயன்


ஆனாலும் அரசாங்கம், பாதுகாப்பு அமைச்சின் மூலதனச் செலவுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளது. ஆச்சரியத்தை கொடுப்பதாகவே உள்ளது. போர் முடிவுக்கு வந்துவிட்ட நிலை யிலும், அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைக்காதற்கு, ஏற்கனவே கடனுக்கு வாங்கிய ஆயுதங்களுக்கான வட்டி மற்றும் கடனை மீளச் செலுத்த வேண்டியுள்ளதும் ஒரு காரணம்.

மற்றொரு காரணம், பிரமாண்டமாக வளர்ந்துவிட்ட பாதுகாப்புப் படைகளின் எண்ணிக்கை.

(11ஆம் பக்கம் பார்க்க)

## அரச செலவினங்கள்

- பாதுகாப்பு அமைச்சு - 214 பில்லியன் ரூபா
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - 75 பில்லியன் ரூபா
- மீண்டெழும், மூலதன செலவினம் - 202 பில்லியன் ரூபா
- இராணுவம் - 108 பில்லியன் ரூபா
- கடற்படை - 30 பில்லியன் ரூபா
- விமானப்படை - 19 பில்லியன் ரூபா
- பொலிஸ் திணைக்களம் - 34 பில்லியன் ரூபா
- சமுர்த்தி பணிப்பாளர் நாயகத் திணைக்களம் - 10 பில்லியன் ரூபா
- சுகாதார அமைச்சு - 62 பில்லியன் ரூபா
- சக்தி, எரிசக்தி அமைச்சு - 33 பில்லியன் ரூபா
- விவசாய அமைச்சு - 28 பில்லியன் ரூபா
- கல்வி அமைச்சு - 29 பில்லியன் ரூபார்
- மீன்பிடித்துறை அமைச்சு - 4 பில்லியன் ரூபா
- ஜனாதிபதி அலுவலகம் - 4 பில்லியன் ரூபா
- மீண்டெழும் செலவினம் - 2.2 பில்லயின் ரூபா
- மூலதன செலவினம் - 2 பில்லியன் ரூபா




© TM GraphicsDesk



வலிகாமம் கல்வி வலய ஆசிரியர்களுக்கு யா/மானிப்பாய் இந்துக்கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்ட வாழ்க்கைக்கான சுகாதாரக் கல்வி செயலமர்வில் அகில இலங்கை சுகாதார அதிகாரியும் சுகாதார மேற்பார்வையாளருமான ஐ.லியனகே உரையாற்றுவதையும் செயலமர்வில் பங்குபற்றிய ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

## நிர்வாக சபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை புதன் கிழமை மாலை 5 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய கூட்டத்தில் இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தின் நிர்வாக மறுசீரமைப்பு, கீரிமலைப் பிரதேச புனரமைப்பு, கிளிநொச்சியில் வசிக்கும் விதவைகள், அநாதைப்பிள்ளைகளின் புனர்வாழ்வுத் திட்டம் இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர் தல், அகில இலங்கை சைவ குருமார் அர்ச்சகர் சபை சமர்ப்பித்த 17 நிவாரண விண்ணப்பங்கள் தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் சித்த மருத்துவத்துறையில் படிக்கும் இடம்பெயர்ந்த மாணவன் வே.லதீஸ் எழுதிய 13.07.2010ஆம் திகதிய கடிதம், கணக்கறிக்கை மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ள தாக ஒன்றியத்தின் செயலாளர் சு.பரமநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளை 24 மணிநேரமும் இயங்கவைக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)


பொது மக்களின் சுகாதாரத் தேவைகளை கருத்தில் கொண்டு சகல அரச வைத்திய சாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளையும் கிழமை நாட்களில் 24 மணித்தியாலயமும் திறந்திருக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுகாதார அமைச்சிற்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பெருந்தொகையான நோயாளர்கள் நாள்தோறும் சிகிச்சைக்காக வெளிநோயாளர் பிரிவுற்கு வருகின்றனர்.

இதனால் ஏற்படும் அசௌகரியங்களை தவிர்த்துக் கொண்டு சிறந்த வகையில் சிகிச்சை வழங்கவும் நோயாளர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கவும் 24 மணித்தியால சேவை உதவியாக அமையும்.

அத்தோடு தொற்று நோய்களுக்கு விரைவாக சிகிச்சை அளிக்கக் கூடியதாகவும் அமையும். எனவே, அரச வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவை 24 மணித்தியாலமும் இயங்க வைக்குமாறு சகல அதிகாரிகளுக்கும் அறிவிக்குமாறு ஜனாதிபதி சுகாதார அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.



இந்தத் திட்டத்தினால் நாட்டின் சுகாதார சேவையை மேம்படுத்த முடியும். மேலும் பல்வேறு நோய்களினால் அவதியுறும் நோயாளிகளுக்கு மேற்படி திட்டம் பெரும் உதவியாக அமைவதோடு நோயற்ற சமூகமொன்றையும் உருவாக்க முடியும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பில் காத்திரமான பங்களிப்பை வழங்கத் தயார்

### ஜனநாயக மக்கள் முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக தமிழரசியல் கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்த தயார் என ஜனநாயக மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

அரசியல் தீர்வினை எட்டுவதற்காக தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து செயற்படத் தயார் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வெளியிட்டுள்ள கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றைப் பெற்றுக் கொடுக்கும் முனைப்புகளில் காத்திரமான பங்களிப்பினை வழங்க தமது கட்சி தயார் என அவர் அறிவித்துள்ளார்.

தமிழரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதே ஜனாதிபதியின் விருப்பம் எனவும் இந்த நிலைப்பாடு வரவேற்கத்தக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சி பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்தை கொண்டிருப்பதாகவும் அரசியல் தீர்வுத்திட்டம் குறித்த முனைப்புக்களில் தீவிரம் காட்ட இதுவே சிறந்த தருணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் இந்த முனைப்புகளை யதார்த்தபூர்வமாக மாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜயவர்த்தன மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க போன்றவர்கள் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கு கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்தவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## சேரி மக்களுக்கான வீட்டுத்திட்டம்

கொழும்பு வாழ் சேரிப்பகுதி மக்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நெறியாள்கையின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீட்டுத் திட்டம் குறித்து தெளிவுபடுத்தும் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் மோதரை மஹவத்தையில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வாவின் தலைமையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன் போது கருத்துத்தெரிவித்த ஆர்.துமிந்த சில்வா சேரிவாசிகளுக்கான வீட்டுத்திட்டம் தமது கனவு என குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் கொழும்பு மாவட்ட சேரிப் பகுதி மக்களுக்கான வீடமைப்புத்திட்டம் குறித்து எதிர்க்கட்சிகள் பிழையான கண்ணோட்டத்தை வெளிப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

## ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் வழங்கல்

யுனிசெப் நிதியுதவியுடன் வடமாகாண சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் ஏழு பேருக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா கடந்த 23ஆம் திகதி ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்களை வழங்கியுள்ளார்.

மேற்படி பதவிக்கு கடந்த மாதம் 11 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. அதன் பிரகாரம் கிளிநொச்சி,யாழ். மாவட்டங்களைச் சேர்ந்த 18 பேருக்கும் ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. நியமனம் வழங்கும் நிகழ்வு அமைச்சின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்றது. (ஸ்ரீ)

## உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்யும் முயற்சியில் பிரதான கட்சிகள்

(கொழும்பு)

அடுத்த வருடத்தின் முற்பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகளில் பிரதான கட்சிகள் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய பிரதான கட்சிகளும் ஏனைய அரசியல் கட்சிகளும் இவ்வாறு வேட்பாளர்களை தெரிவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது.

பிரதான கட்சிகள் வேட்பாளர்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகளின் ஒருபகுதியாக வேட்பாளர்களுக்கான விண்ணப்பங்களை கோருதல் மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்துதல் போன்ற விடயங்கள் இடம் பெற்றுவருவதாக தெரிகின்றது.

அடுத்த உள்ளூராட்சி மன்ற தேர்தலை தொகுதி முறைமையும் விகிதாசார முறைமையும் கலந்த முறைமையில் நடத்துவதுதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதற்கேற்ற வகையில் உள்ளூராட்சி திருத்தச் சட்ட மூலம் தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதாவது 70 வீதம் தொகுதி முறைமையிலும் 30 வீதம் விகிதாசார முறைமையிலும் தேர்தல் நடைபெறும்.

புதிய முறைமையின் கீழ் தற்போது உள்ளதைவிட உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக அமையும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அடுத்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஒரு கோடியே 43 இலட்சத்து 15 ஆயிரத்து 417 பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளதாக தேர்தல் திணைக்கள தகவல்கள் தெரிவித்துள்ளன.

திறமையான மற்றும் பிரபலமான வேட்பாளர்களை இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் களமிறக்கவுள்ளதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் எம்.பி. ஒருவர் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் ஐ.நா.தினத்தை முன்னிட்ட நிகழ்வு நேற்று முன்தினம் யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் 306பி1 உதவி ஆளுநர் பிரியந்த பெர்னான்டோ மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட 306பி1மாவட்ட ஆளுநர் லயன் ஜெயவக்சலம் உரையாற்றுவதையும் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

# ஜனாதிபதியின் அடுத்த நகர்விற்காக காத்திருக்கும் பாராளுமன்றப் பேரவை

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய 18ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட பாராளுமன்றப் பேரவை ஜனாதிபதியின் அடுத்த கட்ட நகர்விற்காக காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான பெயர்களை ஜனாதிபதி பரிந்துரை செய்தால் மட்டுமே பாராளுமன்றப் பேரவையின் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் தம்பிக்க கித்துலேகொட தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழு , இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழு, பொதுச்சேவைகள் ஆணைக் குழு ,தேசிய பொலிஸ் ஆணைக் குழு,மனித உரிமைகள் ஆணைக் குழு ,நிதி ஆணைக் குழு மற்றும் எல்லை நிர்ணய ஆணைக்குழு ஆகியவற்றை உருவாக்குவதற்கான பிரதிநிதிகளை ஜனாதிபதி பரிந்துரை செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆணைக் குழுக்கான உறுப்பினர்களை பரிந்துரை செய்யும் வரையில் பாராளுமன்றப் பேரவையின் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளினது தலைவர்களும் சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான பெயர்களை பரிந்துரை செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

17ஆவது திருத்தச் சட்ட மூலத்தைப் போன்று அல்லது 18ஆவது திருத்தச்சட்ட மூலத்தில் ஜனாதிபதியிடமிருந்தே விடயங்கள் ஆரம்பமாகும் என அவர் குறிப்பிட்டுள் ளார்.

புதிய சட்டதிருத்தங்களின் அடிப்படையில் பாராளுமன்றப் பேரவையில் சபாநாயகருக்கு கூடுதல் அதிகாரங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இலங்கை-இந்திய உறவுகளை வலுப்படுத்த பூரண ஆதரவளிக்கப்படும்

## சஜித் பிரேமதாச எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)


இந்திய இலங்கை உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளபூரண ஆதரவளிக்கப்படும் என ஐக்கிய தேசியக்கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய பின் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு நாடுகளும் பரஸ்பர ரீதியாக நன்மைகளை எட்டக் கூடிய வகையில் உற வுகள் வலுப்படுத்திக் கொள்ளப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

டில்லியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கு பற்றும் நோக்கில் சஜித்பிரேமதாச இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவுடனும் சந்திப்பு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)



தேசமானி கௌரவப்பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட யாழ்.சைவ பரிபாலன சபையின் தேர்வுச் செயலாளர் இரா. செல்வவடிவேல் சைவ பரிபாலன சபையில் வைத்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

# 2010.10 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 0740 - ரோமப் பேரரசின் கொன்ஸ்டண்டீனபோல் நகரில் இடம்பெற்ற நில நடுக்கம் பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியது.
- 1640 - ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்து முதலாம் சார்ள்ஸ் மன்னனுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 1776 - அமெரிக்கப் புரட்சிக்கு ஆதரவு திரட்டும் நோக்கில் பெஞ்சமின் பிராங்கிளின் பிரான்ஸ் புறப்பட்டார்.
- 1859 - வடக்கு வேல்சில் றோயல் சார்ட்டர் என்ற கப்பல் கவிழ்ந்ததில் 459 பேர் இறந்தனர்.
- 1876 - இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே தொடருந்து சேவையை ஆரம்பிப்பதற்கான முடிவு பிரித்தானிய அரசரால் எடுக்கப்பட்டது.
- 1905 -நோர்வே, சுவீடனிடம் இருந்து விடுதலை அடைந்தது.

1917 - முதலாம் உலகப் போர்: இத்தாலி கபொரேட்டோ என்ற இடத்தில் ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியா நாடுகளுடன் மோதி கடும் தோல்வியைச் சந்தித்தது.

- 1917 -முதலாம் உலகப்போர்: பிரேசில் போரில் குதித்தது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: சான்டா குரூஸ் தீவுகளில் இரண்டு அமெரிக்க வான்படைக் கப்பல்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.
- 1947 - ஈராக்கிலிருந்து பிரித்தானிய இராணுவம் வெளியேறியது.
- 1955 - ஆஸ்திரியாவில் கடைசி கூட்டுப் படைகள் வெளியேறின. ஆஸ்திரியா அணிசேரா நாடாக தன்னை அறிவித்தது.
- 1956 - ரஷ்ய இராணுவம் ஹங்கேரியை முற்றுகையிட்டது.
- 1977 - பெரியம்மை நோய் தாக்கிய கடைசி நோயாளி சோமாலியாவில் அடையாளம் காணப்பட்டார். உலக சுகாதார அமைப்பு இந்நாளை பெரியம்மையின் கடைசி நாளாக அறிவித்தது.
- 1979 - தென்கொரிய ஜனாதிபதி பார்க் சோங்-ஹீ இராணுவத் தளபதி கிம் ஜே-கியூ என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்
- 1994 - ஜோர்தான் மற்றும் இஸ்ரேல் அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- 1994 - பேர்மாவின் கடைசித் தேற்றம் அண்ட்ரூ வைல்ஸ் என்பவரால் நிறுவப்பட்டது என அறிவிக்கப்பட்டது.
- 1995 - இஸ்லாமிய ஜிகாட் தலைவர் ஃபாதி ஷிக்காகி என்பவர் மோல்டாவில் உள்ள விடுதி ஒன்றில் மொசார்ட் அமைப்பினரால் கொல்லப்பட்டார்.
- 2000 - ஐவரி கோஸ்ட்டின் ஜனாதிபதி றொபேர்ட் கூயெய் பதவியிறக்கப்பட்டு லோரெண்ட் குபாக்போ என்பவர் ஜனாதிபதியானார்.
- 2001 - ஐக்கிய அமெரிக்கா "அமெரிக்க தேசப் பற்று சட்டத்தை" நிறைவேற்றியது.
- 2002 - மொஸ்கோவில் நாடக மாளிகை ஒன்றில் செச்னியா தீவிரவாதிகள் மூன்று நாட்களாகப் பிடித்து வைத்திருந்த பணயக் கைதிகள் விவகாரம் முடிவுக்கு வந்தது. 150 பணயக் கைதிகளும் 50 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.
- 2003 - கலிபோர்னியாவில் இடம்பெற்ற தீயில் 15 பேர் கொல்லப்பட்டு 250,000 ஏக்கர், மற்றும் 2,200 வீடுகள் சான் டியாகோ நகரில் அழிந்தன.

## பிறப்புகள்

- 1947 - கிலாரி கிளின்டன், ஐக்கிய அமெரிக்காவின் செனட் அவை உறுப்பினர்.
- 1959 - எவோ மொரல்ஸ், பொலிவியாவின் ஜனாதிபதி.
- 1985 - அசின், தென்னிந்தியத் திரைப்பட நடிகை.
- 1985 - மான்ட்டே எலிஸ், அமெரிக்க கூடைப்பந்தாட்டக்காரர்

## இறப்புகள்

- 2001 - மரகதம் சந்திரசேகர், இந்தியக் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர், முன்னாள் மத்திய அமைச்சர்.

**1947 - காஷ்மீர் மகாராஜா இந்தியாவுடன் காஷ்மீரை இணைக்கச் சம்மதித்தார்.**



# சிறுநீரகத்தில் கல் ஏன் தோன்றுகிறது?


டாக்டர் எஸ்.ஏ.பி.

சிறுநீரகத்தில் கல் ஏன் தோன்றுகிறது? இதன் அறிகுறிகள் என்ன? இதற்கும் தொற்றுக்கிருமிகளுக்கும் ஏதும் சம்பந்தம் உண்டா? ஆமாம் உண்டு. இவற்றைச் சற்று விபரமாகப் பார்ப்போம்.

❖ சிறுநீரகக் கல்லுக்கு ரீனல் கால்குலி (Renal Calculi) என்று பெயர். இது பெரும்பாலும் சிறுநீர்ப்பை மற்றும் சிறுநீர்ப்பாதையில் ஏற்படுகிறது. இதன் காரணம் என்ன என்று உறுதியாகக் கூறமுடியவில்லை. பல காரணங்கள் உண்டு. உதார ணமாக ஓமோன்களின் சமச்சீர் இன்மை, சிறுநீரகத் தொற்று (infections), சிறுநீரகத்தில் அதிக உப்பு, விற்றமின் ஏ குறைவு, புறோரைட் அதிகமாகச் சுரத்தல், பரம்பரை மரபணுக் கோளாறு இப்படிப் பல.

❖ இந்த சிறுநீரகக் கற்களில் யூரிக் அமிலம் கல்சியம் ஒக்ஸலேட் (Calcium Oxalate) கல்சியம் பொஸ்பேட் (Calcium phosphate) போன்றவையும் இன்னும் சில பொருட்களும் கலந்திருக்கின்றன.

❖ இது சிறுநீரகப்பகுதியில் மிகுந்த வலியை ஏற்படுத்தும். இது சிறுநீர்ப் பாதையை (urether) அடைத்து விட்டால் நிலைமை மிகவும் மோசமாகிவிடும். சிறுநீர் வெளியேறாது. இது பல பின் விளைவுகளை ஏற்படுத்திவிடும். இதைத் தவிர இந்தக் கற்கள் சிறுநீர்ப்பாதை, சிறுநீர்ப்பை போன்றவற்றின் உட்பறத்தில் புண்களை உண்டாக்கி தொற்றுக்கிருமிகள் எளிதாக வேலை செய்ய உதவுகின்றன.

❖ இதற்கு இப்பொழுது பல நவீன சிகிச்சை முறைகள் வந்து விட்டன. முக்கியமாக அல்ட்ரா ஒலி முறை (ultra sound method) கற்களின் அளவைப் பொறுத்து அவற்றைத் தூள் தூளாக்கி வெளியே கொண்டு வந்து விடுகிறார்கள். அறுவை சிகிச்கை எதுவும் தேவை இல்லை! சிறுநீர்க்கற்கள் பெரிய அளவில் இருந்தால் அறுவை சிகிச்சை தேவை.

நீங்கள் செய்யவேண்டியது சிறுநீரகத்தில் சிறு தொந்தரவு ஏற்பட்டாலும் டாக்டரை உடனே பார்க்கவேண்டும். மற்றவற்றை டாக்டர் பார்த்துக் கொள்வார்!சிலபேருக்கு கற்களை ஒரு தடவை அகற்றினாலும் அது மீண்டும் மீண்டும் வரலாம். இதற்கு புறோா தைரொய்ட்டைப் பரிசோதிக்க வேண்டும். நீரை நிறைய அருந்தவேண்டும்.

# அடிக்கடி தும்மலுக்கு அடிப்படை காரணம்?!



ஒவ்வாமை காரணமாக பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்கு காரணம் இயற்கை சூழல் மாசு அதிகரித்து வருவது தான். அதுமட்டுமின்றி, இயந்திரதனமான வாழ்க்கையும் ஒரு காரணம் என்று கூறுகின்றனர் மருத்துவர்கள்.

சுகாதாரமற்ற சூழலுக்கு சுகாதாரத்துடன் விளங்கும் ஒரு பொருள் வெளிப்படுத்தும் எதிர் விளைவே ஒவ்வாமை. ஆற்றல் மிகுந்த ஒவ்வாத பொருள் உடலுக்குள் நுழையும் நிலையில் அது குறித்து உடலின் நோய் எதிர்ப்புசக்தி உடனடியாக உஷார் அடைகிறது. இதன் விளைவாக தொடர் தும்மல், மூக்கு மற்றும் கண்ணீரில் நீர் வடிதல், தோலில் தடிப்பு என ஒவ்வொருவரின் உடல் தன்மைக்கு தகுந்தாற் போல் அறிகுறிகள் வெளிப்படுகின்றன. பரம்பரைத்தன்மை காரணமாக ஒவ்வொருக்கும் ஒவ்வாமை பிரச்சினை ஏற்படலாம். எனினும் பொதுவாக சுகாதாரமற்ற சுற்றுச்சூழல் தூண்டுதல் காரணமாகவே பெரும்பாலும் ஒவ்வாமை ஏற்படுகின்றது. உதாரணமாக சிகரெட் புகை, வேதிப்பொருள்கள், குளிர் காற்று உட்பட தட்பவெப்ப நிலையில் திடீர் மாற்றம் கடுமையான துர்நாற்றம், மன அழுத்தம் என பல்வேறு காரணங்களால் 'ரைனிடிஸ்' எனப்படும் மூக்குப்பாதை திரவ படலத்தில் வீக்கம் ஏற்பட்டு ஒவ்வாமை ஏற்படும்.

# ஆஸ்துமா நோய்

சென்றவாரத்தொடர்ச்சி

ஒட்சிசன், காபன் டை ஒக்ஸைட், நைதரசன் உட்பட பல்வேறு வாயுக்கள் அடங்கிய வெளிக்காற்று சுவாசக்குழாய் வழியே நுரையீரலுக்குள் நுழைகிறது. இவ்வாறு வெளிக்காற்று வந்தவுடன் அதில் பெரும் பகுதியாக உள்ள ஒட்சிசனை மட்டும் பிரித்தெடுத்து இரத்த அணுக்களுடன் சேர்த்து நல்ல இரத்தமாக மாற்றி இதயத்துக்கு அனுப்பும் முக்கிய பணியை நுரையீரல் செய்கிறது.

இதயத்திலிருந்து தொடங்கி உடல் முழுவதுக்கும் பயணம் செய்து விட்டு வரும் கெட்ட இரத்தத்தை மீண்டும் சுத்திகரித்து ஒட்சிசன் கலந்து நல்ல இரத்தமாக மாற்றி அனுப்புவதையும் நுரையீரல் செய்கிறது.

**உடலில் நுரையீரலின் (Lung) அமைப்பு என்ன?**

உடலில் வலது புறம், இடது புறம் என இரண்டு பக்கமும் நுரையீரல் பரவியுள்ளது. வலது புறம் மூன்று பகுதிகளாகவும் (Lobes) இடதுபுறம்இரண்டு பகுதிகளாகவும் (Lobes) நுரையீரல் அமைந்துள்ளது. மூன்று பகுதிகள் உள்ளதால் வலதுபுறம் நுரை யீரலின் அளவு சற்று பெரிதாகக் காணப்படும். நுரையீரலின் மொத்தம் உள்ள 5 பகுதிகளில் 4 பாதிக்கப்பட்டு ஒன்று நல்ல நிலையில் இருந்தால் கூட ஒருவரை வாழ வைக்க முடியும்.

**புகை பிடிப்பதால் ஆஸ்துமா அதிகரிக்குமா?**

அதிகரிக்கும். புகை பிடிப்பதால் மூச்சுக் குழல் நுரையீரலில் நிரந்தர அலர்ச்சி (Inflammation)ஏற்படுகிறது.

இது ஆஸ்துமாவை அதிகரிக்கச் செய்யும். எந்த மருந்துகள் சாப்பிட்டாலும் புகை பிடிப்பதை நிறுத்தாவிட்டால் ஆஸ்துமா பிரச்சினை நீடிக்கும். புகை பிடிப்பவர் அருகிலிருந்து புகையை சுவாசிப்பதாலும் (Passive smoking) ஆஸ்துமா அதிகரிக்கும்.

**மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வழி என்ன?**

பீன்ஸ் உட்பட நார்ச்சத்து மிகுந்த காய்கறிகளை அதிகம் சாப்பிடுவதன் மூலம் மலச்சிக்கல் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். தினமும் 10 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். குறிப்பாக ஆஸ்துமா நோயாளிகள் இரவில் தூங்கச் செல்வதற்கு முன்பும் காலையில் எழுந்தவுடனும் தண்ணீர் குடிப்பது அவசியம். இதேபோன்றுவாயுக்கோளாறைத்தவிர்க்க உருளைக்கிழங்கு உட்பட கிழங்கு வகைகளை உணவில் தவிர்ப்பது அவசியம். (முற்றும்)

# அடிக்கடி தண்ணீர் குடிக்கலாமா?!

ஆரோக்கியமாக உள்ளவர்கள் போதிய அளவு தண்ணீர் குடிக்காவிட்டால் உடலில் இருந்து கழிவுகள் முழுமையாக வெளியேறாது. இதனால் சிறுநீர் வெளியேறும் போது எரிச்சல் ஏற்படும். ஆரோக்கியமாக உள்ளவர்களுக்கு தினமும் இரண்டு லீற்றர்வரை சிறுநீர் வெளியே றினால் இயல்பு நிலை.



இதயநோய், சிறுநீரக பாதிப்பு நோய் உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனைப் படி குடிநீரின் அளவை நிர்ண யித்துக் கொள்வது அவசியம். ஏனெனில் கூடுதல் தண் ணீரை வெளியேற்ற இதயம் அதிகமாக இரத்தத்தை பம்ப் செய்ய வேண்டியிருக்கும்.

ஒருநாளைக்கு மூன்று லீற்றர் தண்ணீர் குடித்தால் போதுமானது. அதேபோல் சிறுநீர் அடிக்கடி வெளி யேறக் கூடாது.

ஆரோக்கியமாக உள்ளவர்கள் 4 முதல் 6 மணி நேரத்துக்கு ஒருமுறை தான் சிறுநீர் கழிக்க வேண்டும். இதற்கு குறைந்த நேரத்தில் சிறுநீர் கழித்தால் உடனே மருத் துவரிடம் ஆலோசனை செய்யவும்.

சிறுநீர் பிரச்சினை, மது குடித்தல், புகைப் பழக்கம், சிறுநீர் தொற்று, முதுமை என அடிக்கடி சிறுநீர் கழிப்பதற்கு பல காரணங்கள் உண்டு.

முதுமையில் புராஸ்டேட் சுரப்பி வீக்கம் காரணமாகவும் அடிக்கடி சிறுநீர் வெளியேறும். ஆனால் குளுகுளு அறையில் இருப்பது, பரபரப்பாக செயற்படுவது, பதட்டத்தில் இருக்கும் நேரங்களில் சிறுநீர் கழிக்கும் உணர்வு அடிக்கடி ஏற்பட்டால் அதனால் எந்தப் பிரச்சினையும் இல்லை!




# குழந்தையின் உணவு

சென்றவாரத்தொடர்ச்சி

**4 முதல் 6 மாதம் வரை**

நான்காம் மாதத்திலிருந்து குழந்தைகளுக்குதிட உணவு கொடுக்க வேண்டும். இந்த மாதத்தில்தான் குழந்தையின் ஜீரண மண்டலம் எளிதில் செரிக்கும். கூழ் போன்ற உணவுகளை ஜீரணிக்கத் தயாராக இருக்கும். இதனால் நான்காவது மாதம் முதலே உணவு கொடுக்க ஆரம்பிக்கலாம்.

கடைகளில் டின்களில் அடைத்து விற்கப்படும் மா உணவுகளை விட எளிதாக நம் வீட்டிலேயே அத்தகைய உணவுகளை தயாரித்துக் கொடுக்கலாம்.

அரிசி மா-2 தேக்கரண்டி, பசுவின் பால் -100 மி.லீ, சீனி -1ஸ்பூன், நெய் அல்லது தேங்காய் எண்ணெய் -1 ஸ்பூன்.

அரிசி மாவு தயாரிக்க புழுங்கல் அரி சியே சிறந்தது. புழுங்கல் அரிசியை நன்கு சுத்தமாக கழுவி, சிறிது நேரம் ஊறவைத்து, பின் நன்கு வடிகட்டி, நல்ல வெள்ளைத் துணியில் காயவைத்து, நன்கு மையாக அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

2 தேக்கரண்டி அரிசிமாவை அரை டம்ளர் நீரில் போட்டு அதில் 100 மில்லி லீற்றர் பாலையும் கலந்து நன்கு கொதிக்க வைக்க வேண்டும். அரிசி மா நன்கு வெந்தவுடன் ஒரு ஸ்பூன் சீனியையும் நெய் அல்லது தேங்காய் எண்ணெயை சேர்த்து சிறிது கொதிக்க வைத்து ஆறவைத்து குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். இதில் குழந்தைக்குத் தேவையான அனைத்து சத்துக்களும் நிறைந்துள்ளன.



அரிசி மாவில் - காபோவைதரேற்ட், பாலில் -கல்சியம், புரதம், நெய் -கொழுப்பு, சீனி-குளுக்கோஸ் என குழந்தைக்கு வேண்டிய சமச்சீர் உணவாக இது உள்ளது.

தாய்ப்பாலையும் மேற்கண்ட உணவையும் தினமும் 3 மணி நேரத்திற்கு ஒரு முறை மாறி மாறி கோடுத்து வந்தால் குழந்தை வளர்ச்சி ஆரோக்கியமாக இருக்கும்.

இந்த மா டின்களில் அடைத்து வைக்கப் பட்டிருக்கும் மா உணவுகளை விடச் சிறந்தது.

**6முதல் 9மாதம் வரை**

கோதுமை, சோயா, பொட்டுக்கடலை முந்திரி, பாதாம் இவைகளை சேர்த்து அரைத்து மா கஞ்சியாக கொடுக்கலாம்.

முதலில் கொடுத்த தாய்ப்பால் மா கஞ்சியுடன் இந்த சத்துமாவுக் கஞ்சியையும் சேர்த்துக்கொடுத்தால் குழந்தையின் வளர்ச்சி சீராக இருக்கும். உடல் உறுப்புகள் நன்கு பலப்படும். எலும்புகள் பலப்படுவதால் குழந்தை நன்கு வளரும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

**9 மாதம் முதல் 12 மாதம் வரை**

மேலே குறிப்பிட்ட வகைகளுடன் சற்று திடமான உணவுகளை கொடுக்க வேண்டும். இந்தக் காலங்களில் தான் குழந்தைகளுக்கு பல் முளைக்கும். இக்காலத்தில் எளிதில் சாப்பிட ஏதுவான உணவுகள், பழத்துண்டுகள் நறுக்கி கொடுக்கலாம்.

(முற்றும்)

**குழந்தை மருத்துவ இதழ்**

**தமிழ் நாடு அரச மருத்துவனை**

# செய்தித் துளிகள்

### சீசன் அலர்ஜி

சீசன் அலர்ஜி என்றால் என்ன தெரியுமா? மரம், காற்று ,சிறிய பூச்சிகள், புழுக்கள் போன்றவற்றால் பரவும் கிருமிகள் மூலம் ஏற்படும் அலர்ஜி பாதிப்புகள். கோடைக் காலங்களில் தான் இதுபோன்ற அலர்ஜி மாசுகள் பாதிப்பை ஏற்படுத்தும். மரத்தில் இருந்து விழும் வித்தியாசமான துகள்கள், நாய் போன்ற பிராணிகளிடம் இருந்து பரவும் வாயு, படிமம், சுற்றுச்சூழல் மாசுகள் தான் இப்படிப்பட்ட அலர்ஜிகளுக்கு காரணம். மழை, குளிர் காலங்களில் இந்த பிரச்சினை இருக்காது.

### அதிகாலையில்

வயதான சிலர் அதிகாலையில் எழும் பழக்கம் கொண்டவர்கள். அவர்கள் இந்த குளிர் காலத்தில் சற்று நேரம் கழித்து எழுவது நல்லது. அதுபோல உடற்பயிற்சியை செய்வதையும் வெயில் சற்று வந்து வெது வெதுப்பு ஏற்பட்டதும் செய்யலாம். குளிர்பானங்கள் குடிப்பதை தவிர்ப்பது மிக முக்கியம். ஜலதோஷம், காய்ச்சல் வருவது பெரும்பாலும் அதனால்தான்.

### நீர்ப்பூசணி மகிமை

அலர்ஜி போக்கவும் அழகாக தோற்றமளிக்கவும் சிறந்த செலவில்லாத ஒரு உணவுப்பொருள் உள்ளது தெரியுமா? அது தான் நீர்ப்பூசணி. இதை அப்படியே சாப்பிடலாம். ஜுசாகவும் குடிக்கலாம்.

உடலுக்கு மிக நல்லது. எதிர்ப்பு சக்தியை வளர்க்க வல்லது இது. வெள்ளரி போலவே நீர்ப் பூசணியும் முக அழகு ஏற்படுத்த பேஸ் பேக்காக உதவுகிறது.

(முற்றும்)






தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாந்தை உப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய முன்னாள் ஊழியர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட தொழில் உறவுகள் உற்பத்தித் திறன் அமைச்சர் காமினி லொக்குகே மங்கல விளக்கேற்றுவதையும் பிரதி அமைச்சர் கலாநிதி ஜெகத் பாலசூரிய உரையாற்றுவதையும் மாந்தை உப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்தவர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நஷ்ட ஈட்டுத் தொகை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

# வெற்றுப் பீரங்கித் தோட்டாக்களை எடுத்துச் சென்ற அறுவர் கைது

(கொழும்பு)

வெற்றுப் பீரங்கித் தோட்டாக்களை எடுத்துச் சென்ற ஆறு பேர் தெல்தெனிய நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் 89 வெற்றுப் பீரங்கித் தோட்டாக்களை லொறியொன்றில் கொண்டு சென்றபோதே கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பிக்கு ஒருவர் உட்பட பிலிமத்தலாவை, தவுலகல, அம்பிட்டிய மற்றும் கரலியத்த பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, களனி வனவாசல பகுதியில் 9 மில்லி மீற்றர் ரக தோட்டாக்களைப் பயன்படுத்தக் கூடிய துப்பாக்கியுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலைய தீ விபத்து குறித்து இரசாயன பகுப்பாய்வு

## மின்சக்தி அமைச்சர் சம்பிக்க தகவல்

(கொழும்பு)



நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீப்பரவல் தொடர்பாக இரசாயன பகுப்பாய்வு மற்றும் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மின் சக்தி வலுத்துறை அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பான அறிக்கைகள் கிடைக்கும் பட்சத்தில் தீப் பரவல் ஏற்பட்டமைக்கான உண்மையான காரணத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்னமும் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்காத அனல் மின்நிலையத்தில் தீ ஏற்பட்டமை தொடர்பாக தகவல் வெளியிடும் செய்தியாளர் மாநாடு மின்சக்தி வலுத்துறை அமைச்சில் நேற்று இடம்பெற்றது.

அதேவேளை, இந்த தீவிபத்துக் காரணமாக நுரைச்சோலை மின்உற்பத்தி நிலையத்தின் கட்டமைப்பிற்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பாகவும் ஆராயப்படுகிறது.

இதுகுறித்து ஆராய்வதற்கு அணுசக்தி அதிகார சபையின் ஆதரவையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தீப்பரவல் சம்பவத்தினால் ஏற்பட்ட நட்டத்தை மின்னுற்பத்தீ நிலையத்தை நிர்வகிக்கும் நிறுவனமே பொறுப்பேற்றுக் கொள்ளும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், முன்னர் திட்டமிட்டிருந்த வகையில் அனல் மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளதுடன் இதனடிப்படையில் எதிர்வரும் ஜனவரி மாதம் நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து தேசிய மின்சார விநியோக கட்டமைப்பிற்கு மின்சாரத்தை விநியோகிக்கும் சவாலை வெற்றிகொள்ளப் போவதாக அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# மற்றொரு விமான நிலையம் 2012 இல் திறக்கப்படும்

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள மாத்தளை பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச விமான நிலையம் 2012 ஆம் ஆண்டு திறக்கப்படும் என துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் றோகித அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் கட்டுநாயக்காவில் மட்டும் சர்வதேச விமான நிலையம் உள்ளதால் எதிர்காலத்தில் அதிகரிக்கும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கைகளை சமாளிப்பதற்கு மேலதிக சர்வதேச விமான நிலையம் தேவை.

எனவே தான் மிகவும் தரம் மிக்கதாக அம்பாந்தோட்டை துறைமுகம் அமைக்கப்படுகின்றது. எமது அடுத்த தேவை ஆடம்பர விடுதியாகும். தற்போது இலங்கையில் 17 ஆயிரம் அறைகளே பயணிகள் தங்குதற்கு உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சீனாவின் உதவியுடன் இந்த விமான நிலையம் அமைக்கப்பட்டு வருவது தொடர்பில் அமைச்சர் எதனையும் குறிப்பிடாது தவிர்த்துள்ளதாக இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-2)

# பயங்கரவாதம் இல்லாத...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போது இலங்கை இராணுவத்தில் மட்டும் 2இலட்சத்து 3ஆயிரம் பேர் இருக்கின்றனர். கடற்படையில் சுமார் 48 ஆயிரம் பேரும், விமானப்படையில் சுமார் 29 ஆயிரம் பேரும் இருக்கின்றனர்.

முப்படைகளினதும் ஆட்பலம் மட்டும் கிட்டத்தட்ட 2இலட்சத்து 80 ஆயிரம் ஆகியுள்ள நிலையில் சிவில் பாதுகாப்புப் படை, பொலிஸ் என்று வேறு இருக்கின்றன. போர்க்காலத்தில் தேவைப்பட்டது மிகப் பெரிய படைக்கட்டமைப்பு.

தற்போது போர்முடிவுக்கு வந்து விட்டது. ஆனால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட படையினரை அதே வேகத்தில் குறைக்க முடியாது. அதேபோல அவர்களுக்கு வழங்கிய சலுகைகள், வசதிகள் போன்றவற்றையும் சடுதியாகக் குறைக்க முடியாத நிலை உள்ளது.

படையினருக்கான சம்பளம், அடிப்படைத்தேவைகள் வசதிகளுக்காக மாதாந்தம் பெருந்தொகைப் பணம் செலவாகிறது. பாதுகாப்பு அமைச்சுக்கு வருடாந்தம் ஒரு மில்லியன் சோடி சப்பாத்துக்கள் தேவைப்படுகின்றன என்றால் ஏனைய தேவைகள் எப்படியிருக்கும் என்று ஓரளவுக்கு புரிந்துகொள்ள முடியும்

போர் முடிவுக்கு வந்துவிட்டால் போதும் நாட்டை அபிவிருத்தி செய்து விடலாம் என்று அரசாங்கம் கூறியது உடனடிச்சாத்தியமான விடயமல்ல என்பது இப்போது தான் பலருக்கு தெரியவருகிறது.

### போர்ச் சகதிக்குள் கால்

போர் என்பது சகதி போன்றது. அதில் வைத்த காலை எடுப்பது இலகுவானதல்ல. அப்படி எடுத்தாலும் அதைக் கழுவி விடுவது இலகுவாக இருக்காது.

இதைப் பாதுகாப்பு அமைச்சின் பிரமாண்டமான நிதி ஒதுக்கீடுகளில் இருந்தே புரிந்துகொள்ள முடிகிறது.

அதேவேளை பாதுகாப்பு அமைச்சுக்கு அரசாங்கம் அதிக நிதியை ஒதுக்குவதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முட்டாள்தனமானது என்று விமர்சித்துள்ளது. "இன்னொரு போரை எதிர்பார்த்து அதிக நிதியை ஒதுக்குகிறது. போர் முடிந்த பின்னர் பாதுகாப்புச் செலவு குறைவதே உலகியல் வழக்கம். ஆனால் இலங்கையில் அதற்குமாறாகவே நடக்கிறது" என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் விமர்சித்துள்ளார்.

உலகப் பொருளாதார நிலைமை தற்போது செழிப்பான நிலையில் இல்லை என்பது தெளிவு. இதன் காரணமாக பிரிட்டனே படைக்குறைப்பு, பாதுகாப்புச் செலவினக் குறைப்பு என்று இறங்கியுள்ளது.

ஆனால், கடன்பட்டு சீவியம் நடத்தும் இலங்கையோ பாதுகாப்பு செலவினத்தை அதிகரிப்பதில் மற்றைய நாடுகளுடன் போட்டி போடும் நிலையில் உள்ளது.

இந்த நிலையானது அபிவிருத்தி நோக்கிய பாதையில் நாட்டை முன்னோக்கிக்கொண்டு செல்லுமா என்ற கேள்வியை பொருளியலாளர்கள் மத்தியில் எழுப்ப வைத்துள்ளது.

நாட்டின் மொத்த செலவினங்களில் சுமார் 20 சதவீதத்தைப் பாதுகாப்புச் செலவினமே விழுங்கி ஏப்பம் விடுகிறது.

### அபிவிருத்திக்கு பின்னடைவு

இதன் காரணமாக கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளுக்கான நிதிஒதுக்கீடுகளும், அபிவிருத்திக்கான ஏனைய நிதி ஒதுக்கீடுகளும் குறைவடைந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே பாதுகாப்புச் செலவின அதிகரிப்பினால் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குறைவடைந்து வருகிறது.

2007 இல் கல்வி அமைச்சுக்கு 8 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. 2008 இல் அது 5ஆயிரத்து 200 கோடியாகக் குறைந்தது. 2009 இல் 4ஆயிரத்து 600 கோடியாகச் சுருங்கியது. அடுத்த வருடத்தில் 3ஆயிரத்து 720 கோடி ரூபாவாகக் குறையப் போகிறது.

வருடாந்தம் சனத்தொகை அதிகரிப்புக்கேற்ப மாணவர்களின் தொகையும் அதிகரிக்கிறது. ஆனால் கல்விக்கான நிதி ஒதுக்கீடு மட்டும் குறைந்து செல்கிறது.

அதேவேளை பாதுகாப்புக் கட்டமைப்புக்கள் விரிவாக்கப்படும் போது அதற்கேற்ப நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கின்றன.

இந்தக் கட்டத்தில் இலங்கை அரசு போருக்குப் பின்னர் மீள் எழுச்சி காண்பதற்கு இருக்கின்ற வழிகளைப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. பாதுகாப்பு அமைச்சை வளர்த்தெடுப்பதில் தான் அதன் கவனம் அதிகமாக உள்ளது.

இது ஏனைய அபிவிருத்திச் சுட்டிகளைப் பாதிக்கும். அது பொருளாதார இலங்கையை மேலும் பின்னுக்குத்தள்ளவே உதவப் போகிறது. எவ்வாறாயினும் அடுத்த சில ஆண்டுகளில் பாதுகாப்பு செலவினம் 20 சதவீதத்தால் குறைக்கப்பட்டு விடும் என்று ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறியுள்ளார். இதையே தான் அரசாங்கம் முன்னரும் கூறியது. ஆனால் அது நடக்கும் என்று நம்புகின்ற நிலையில் நாட்டு மக்கள் இப்போது உள்ளார்களா என்பது கேள்விக்குறிதான்.

நன்றி:-தமிழ் மிரர்

# 13 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

13ஆம் எண்ணை வெளிநாடுகளில் கெட்ட எண் என்றே கருதுகிறார்கள். இந்த எண்ணின் மகத்துவமும் வேகமும் அறியாமல் தான் இப்படிக் கூறுகிறார்கள். 13ஆம் திகதியில் பிறந்தவர்களுக்கு 1 மற்றும் 3ஆம் எண்களின் ஆதிக்கம் முழுமையாகக் கிடைக்காததே இதற்குக் காரணமாகும். இரண்டு எண்களின் ஆதிக்கம் மிகமிகக் குறைவான நபர்களுக்கே கிடைக்கும் என்பதே உண்மை. இவர்களின் தொழில் எண்கள் 4, 9. தொழில் உதவி செய்யும் எண்கள் 5, 8.

இவர்களில் மிகச்சிலரே அரசுத் துறைகளில் இருப்பதைக் காணலாம். மனம்போன போக்கில் மனதில் நினைத்ததைச் செயற்படுத்தும் குணம் கொண்டவர்களாக இருப்பதைக் காணலாம். பலர் தெய்வ நம்பிக்கை இல்லாமல் தவறான வழியில் செல்பவர்களாக இருப்ப தால், திடீர் சரிவையும் மன நிம்மதியை இழக்கும் நிலையையும் தாங்களே ஏற்படுத்திக் கொள்வார்கள். எண்ணின் ஆதிக்கமும், தொழில் எண்களான 4 மற்றும் 9இன் ஆதிக்கமும் பெற்றவர்கள் ஆராய்ச்சி மற்றும் அறிவுபூர்வமான தேடல்களில் மனதைச் செலுத்துபவர்களாக இருப்பார்கள். பெரும்பாலும் எதையாவது எதிர்பார்த்தே எதையும் செய்யும் நிலையில் இருப்பவர்களும் இவர்களே. தான் நினைத்தது கிடைக்கவில்லை என்றால் மற்றவர்களுக்கும் கிடைக்கக் கூடாது என்ற எண்ணம் மிக அதிகமாக இவர்களிடம் காணப்படும். அதே நேரத்தில் பிறரைக் கெடுப்பதிலும் மனம் செல்லும். தன்னம்பிக்கையும் தெய்வ நம்பிக்கையும் இருந்துவிட்டால் இவர் கள் மிக உயர்வான நிலையை அடைவார்கள்.

இவர்கள் செவ்வாய்க்கிழமை தோறும் துர்க்கை அல்லது காளி அம்மனை வழிபாடு செய்து வந்தால் நன்மைகள் கிடைக்கப் பெறலாம்.

இவர்கள் இரசாயனம் மற்றும் மருந்து சம்பந்தப்பட்ட துறைகளிலேயே தொழில் புரிபவர்களாக இருப்பார்கள். எதையும் தீவிரமாக ஆராய்ந்து செயற்படுத்துபவர்கள். மனதில் தோன்றியபடி செயல்படும் குணம் உடையவர்களாகவும் இருப்பார்கள். மனதில் பதற்றம் அதிகமாகவே இருக்கும். எப்படியும் முன்னேற வேண்டும் என்ற விடாப்பிடியான குணம் கொண்டவர்கள். எப்படியும் 31 அல்லது 40 வயதுக்கு மேல் இவர்களின் தொழில் நிலை உயர்ந்து, வாழ்க்கையில் வெற்றி அடையும் நிலை இருக்கும். தொழில் மற்றும் தொழில் உதவி எண்கள் இந்த வயதுகளில் நன்மை செய்வதால் தான் இந்த நிலை உண்டாகிறது. தொழில் மேன்மை பெற வெள்ளிக்கிழமைதோறும் தலைக்கு மேல் ஐந்துதலை நாகம் கொண்ட விநாயகரை வழிபாடு செய்து வந்தால், தொழில் வளர்ச்சி மற்றும் பொருளாதார நிலை உயர்வு கிடைக்கப் பெறுவார்கள்.

இவர்கள் பெரும்பாலும் மனநிறைவின்றி, "எனக்கு விதிக்கப்பட்ட விதி இது தான்" என்று நினைத்து தொழில் செய்பவர்களாகவே இருப்பார்கள். மன தைரியம் இன்றிச் செயற்படுவதால்தான் இப்படி இருக்கிறார்கள். மருத்துவமனை அருகிலோ அல்லது வசிக்கும் வீடு நீள-அகலம் மாறுபாட்டுடனோ இருந்தால், வெகுவிரைவில் முன்னேறி சுயமாகத் தொழில் செய்யும் நிலையை அடைவார்கள். இவர்களுக்கு பிறந்த திகதியின் ஆதிக்கம் செயற்படாமலும் தொழில் உதவி எண்களான 5, 8ஆம் எண்களின ஆதிக்கம் மட்டும் செயற்படுவதாலும் தடுமாற்றம் காணப் படுகிறது. இவர்கள் செவ்வாய்க்கிழமை தோறும் சிவபெருமானையும், தம்பதி சமேத ராய் இருக்கும் சனீஸ்வர பகவானையும் வழிபாடு செய்து வந்தால் ஏற்றமான வாழ் வைப் பெறலாம்.

நுணுக்கமான அறிவைப் பெற்றவர்கள் என்றே இவர்களைக் கூற வேண்டும். பெரும் பாலும் திறமைசாலிகளாக இருப்பார்கள் என்றாலும் மிக அதிகமானவர்கள் இரண் டாம் இடத்தில் தான் இருப்பார்கள். எண் ணத்தில் உதித்தது வாழ்க்கையில் நடக் கும் நிலை உடையவர்களாக இருப்பார்கள். தெய் வத்தின் அருள் பெற்றவர்களாதலால் சொல் லும் செயலும் தீர்க்கமாகவே அமையப் பெற்றவர்கள். ஒழுக்கக்கேடான செயல்களா லோ அல்லது தவறான சேர்க்கையாலோ தான் இவர்கள் தொழில் சரிவைப் பெறுகிறார் கள். தொழில் எண்களான 4, 9இன் ஆதிக்கம் நேரிடையாகவும்; தொழில் உதவி எண்க ளான 5, 8இன் ஆதிக்கம் மறைமுகமாகவும் செயற்படுவதால் இடைவெளி விட்டுத்தான் தொழில் உயர்வு நிலை இருக்கும். எதிர்ப்பு களும் எதிர்பார்ப்புகளும் தொடர்ந்த வண் ணமே இருக்கும். இந்த நிலை மாற வெள் ளிக்கிழமை தோறும் நடராஜரையும் சிவகாமி அம்பாளையும் வழிபாடு செய்து வந்தால் நன்மைகள் அதிகம் பெறலாம்.

பிறந்த திகதி 13, விதி எண் 1 ஆக இருப்ப வர்களுக்கு 28 ஆண்டுகள் நற்பலன் உண்டாகும். பிறந்த திகதி 13, விதி எண் 2ஆக இருப்பவர்களுக்கு 19 ஆண்டுகள் மிக அதிகமான நற்பலனும்; 12 ஆண்டுகள் சற்று குறைவான நற்பலனும் உண்டாகும். பிறந்த திகதி 13, விதி எண் 3ஆக இருப்ப வர்களுக்கு 22 ஆண்டுகள் நற்பலன் கிடைக் கும். பிறந்த திகதி 13, விதி எண் 4ஆக இருப் பவர்களுக்கு நேர்மையான வழியில் 21 முதல் 23 ஆண்டுகள் நற்பலன் கிடைக்கும். பிறந்த திகதி 13, விதி எண் 5ஆக உள்ள வர்களுக்கு மிக அதிக பட்சமாக 31ஆண் டுகள் நற்பலன் கிடைக்கும். பிறந்த திகதி 13 விதி எண் 6ஆக உள்ளவர்களுக்கு 27 ஆண்டுகள் நற்பலன் கிடைக்கும். பிறந்த திகதி 13, விதி எண் 7ஆக இருப்பவர்களுக்கு 19ஆண்டுகள் அல்லது 25 ஆண்டுகள் நற்பலன் கிடைக்கும். பிறந்ததிகதி 13 விதி எண் 8ஆக உள்ளவர்களுக்கு 31அல்லது

**எஸ்.என்.ஹிரிஜி**

35 வயதுக்குமேல் (பெயரெண் ஆதிக்கம் இருப்பவர்களுக்கு) ஆயுள் முழுவதும் நன்மைகள் செய்யும்.(ஒரு சிலர் மிக அதிகமான பொருளாதாரச் சரிவைப் பெற்ற வர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு தெய்வ நம்பிக்கை குறைவாக இருக்கும்). பிறந்த திகதி 13 விதி எ்ண் 9ஆக உள்ள வர்களுக்கு 24 வருடங்கள் அல்லது 33 வருடங்கள் நற்பலனைச் தரும்.

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத் தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும்.

(வியாழன் தொடரும்)





யாழ்.வலயக்கல்வி அலுவலர்களிடையே வெற்றி மனப்பாங்கை வளர்க்கும் நோக்கில் நேற்று நடத்தப்பட்ட செயலமர்வின் போது கலாநிதி க.குகதாசன் சத்தியப் பிரமாணம் செய்வதையும் கலந்து கொண்ட வலயக்கல்வி அலுவலர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

## வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராகப் போராட ஜே.வி.பி.திட்டம்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு எதி ராக பாரிய போராட்டங்கள் நடத்தப்படும் என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

யுத்தம் நிறைவடைந்து 17 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் மக்களின் அடிப் படை பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்கவில்லை என ஜே.வி.பி.யின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித் துள்ளார்.

வாழ்க்கைச் செலவு உயர்விற்கு எதிர்ப்பு தெரிவித்து அடுத்த மாதத்தில் நாடு தழுவிய ரீதியில் பாரியளவு எதிர்ப்பு போராட்டங்கள் நடத்தப்படும். பொருட்களுக்கான விலையேற் றங்களையும் வரிச் சுமைகளை மட்டுமே மக் கள் எதிர்பார்க்க முடியும். சம்பள உயர்வு வழங் கப்படும் என எதிர்பார்க்க முடியாது.

2011 ஆம் ஆண்டு உத்தேச வரவு -செல வுத்திட்டத்தின் மூலம் நாடு இன்னமும் பாரிய கடன் சுமைக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளது. தலா நபரின் தேறிய கடன் பெறுமதி 2 இலட் சத்து 50 ஆயிரம் ரூபாவாக உயர்வடைந் துள்ளது. யுத்த காலத்தில் நாடு எதிர் நோக் கிய நெருக்கடி நிலைமைகளை விடவும் அபா யமான ஓர் நிலையை தற்போது நாட்டின் பொரு ளாதாரம் எதிர்நோக்கி வருவதாக அவர் தெரி வித்துள்ளார்.

இதேவேளை இலங்கையின் பொருளா தாரம் சாதகமான நிலையை நோக்கி நகர்ள வதாக சர்வதேச நாணய நிதியம் அண்மை யில் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக் கது. (ஸ்ரீ-2)

## ஜனாதிபதி மஹிந்தவை நேரில் சந்திக்க இராமேஸ்வரம் மீனவர்கள் தீர்மானம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து தமது பிரச்சினைகள் குறித்து கலந் துரையாடவென இராமேஸ்வரம் மீனவர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி இலங்கைக்கு வர வுள்ளனர்.

இலங்கை கடற்படையினரின் தாக்குத லால் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப் பில்லை எனக் கூறி இராமேஸ்வரம் விசைப் படகு மீனவர்கள் கடந்த ஓகஸ்ட் 8 ஆம்திகதி முதல் கடலுக்கு செல்வதை தவிர்த்து கால வரையற்ற போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் பின் இராமநாதபுரத்தில் நடந்த கடலோரப் பாதுகாப்பு கூட்டத்தில் இனி இலங்கை கடற்படையினரின் தாக்குதல் இருக்காது என உறுதியளிக்கப்பட்டது.இதனால் மீனவர்கள் மீண்டும் கடலுக்கு செல்லத் தொடங்கினர்.

இந்நிலையில் மத்திய , மாநில அரசுகள் தமிழக மீனவர்களின் பிரச்சினைகளை தீர்க் காததால் இராமேஸ்வரம் துறைமுக விசைப் படகு மீனவர்கள் சங்க பிரதிநிதிகள் இலங் கைக்கு வந்து ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ,மீன்வளத்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளை சந்தித்து தமிழக மீனவர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என முடிவு செய்துள்ளனர். இது குறித்து துறை முக விசைப்படகு மீனவர்கள் சங்க செயலர் தேவதாஸ் கூறியதாவது ,

நாங்களே இலங்கைக்கு நேரில் சென்று இலங்கை ஜனாதிபதியை சந்தித்து மீனவர் கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடிவு செய்துள்ளோம். இதன்படி வரும் 4 ஆம் திகதி என் தலைமையில் ஐந்து நிர்வாகிகள் இலங் கைக்கு செல்கிறோம். அங்கு மீன் வளத் துறை அமைச்சரின் ஆலோசகர் அந்தோணி முத்து மூலம் அமைச்சர் மற்றும் ஜனாதிபதியை சந் திக்க உரிய அனுமதி வாங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. அதன்போது மீனவர்கள் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும், மீன்பிடி தொழில் தடையின்றி நடக்க பாதுகாப்பு வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியு றுத்துவோம். இதன் மூலம் சுமுக தீர்வு கிடைக் கும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.ள (ஸ்ரீ-2)

நிதானமாக ஆலோசியுங்கள்; ஆனால் துணிவுடன் பேசுங்கள்.

~ சார்லஸ் கோல்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கற்றுக் கொண்ட பாடத்தில் உங்கள் பதில் இருக்கட்டும்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அடுத்த மாதமளவில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளதான தகவல்கள் வெளியாகியுள்ளன.

கற்றுக் கொண்ட பாடங்கள் என்ற சொற்பதத்தில் எமக்கு எந்தவிதமான உடன்பாடும் கிடையாது. யாரிடம் இருந்து யார் கற்றுக் கொண்டது? இந்தக் கேள்வி எங்களிடம் ஏற்படாமல் போனமை வேதனைக்குரியதே.

வன்னிப் போரில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சாட்சியங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

அப்படியானால் அவர்கள் கற்றுக் கொண்ட பாடத்தை ஆணைக்குழுவிற்கு ஒப்புவிக்கின்றனர் என்பது பொருளாகும்.

அட! யாரிடம் கற்றுக் கொண்ட பாடம் எனக் கேட்டால் இலங்கை அரசிடம் –படையினரிடம் என்பது விடையாக இருக்கும்.

இந்தக் கேள்விக்கப்பால் ஏன் பாடம் கற்றுக் கொண்டனர் அல்லது எதற்காக பாடம் கற்பிக்கப்பட்டது என்ற உப கேள்வி ஒன்றை மனத்திற்குள் எழுப்பினால்,ஆணைக்குழுவிற்கு பெயர் வைத்ததன் நோக்கம் புரியும்.

பரவாயில்லை பெயரை வைத்துக் கொண்டு எதுவும் நடப்பதில்லையே!

"இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு" என்று எங்கள் நாட்டை விளித்துக் கூறுகின்றோம்.

சனநாயகம் என்பதன் அடிப்படை பண்புகளுக்கே பிச்சை எடுக்கும் நிலையில் அந்தப் பெயரால் என்ன பயன்?

அது போன்றுதான் கற்றுக் கொண்ட பாடங்கள் என்ற பெயர் தொடர்பிலும் நிலைமை இருக்கும் என்பதால் அது பற்றி நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

ஆனாலும், யாழ்ப்பாணத்தில் அந்த ஆணைக்குழுவின் விசாரணை இடம்பெறவே போகின்றது. விசாரணைக் குழுவின் முன் சாட்சியம் அளிப்பது தொடர்பில் ஏற்கெனவே இவ்விடத்தில் சில விடயங்களை பிரஸ்தாபித்திருந்தோம்.

எனவே அதை மீண்டும் பிரஸ்தாபித்து "கூறியது கூறல்" என்ற பெரும் குறைக்குள் அகப்பட விரும்பவில்லை.

இருந்தும் ஆணைக்குழு விசாரணை நடத்தப் போவதும் அதன்முன் சாட்சியமளிக்கப்படப் போவதும் உண்மை. இவ்வாறு சாட்சியமளிப்பவர்கள் நிதானமாகச் செயற்பட வேண்டும்.

விசாரணைக் குழுவிடம் போய் தேவையற்ற விடயங்களை ஒப்புவித்து விட்டு வருவது பிரயோசனமற்றதாகும்.

கடந்த காலங்களில் எங்கள் பிரச்சினையை அறிய வந்தவர்களிடம் ஆங்கிலம் பேசும் திறத்தை நாம் காட்டினோமேயன்றி விடயத்தை விளக்கவில்லை.

எனவே நீண்ட காலம் தொடர்ந்து விட்ட தவறை இம்முறையும் விடாமல் மிகவும் நிதானமாகச் சிந்தித்து பதிலளிக்க வேண்டும்.

அதிலும் அரச அதிகாரிகள் அறுபது வயதிற்குப் பின் ஓய்வு என்ற உண்மையை உள்ளத்திருத்தி தேவையில்லாப் புகழாரங்களை கூறாமல் நடுத் தெருவில் நாதியற்று நிற்கும் தமிழனத்தின் நிலையுணர்ந்து உண்மைகளைக் கூற வேண்டும்.

# யாழ்ப்பாணத்தை சகல வசதிகளும் நிறைந்த பிரதேசமாக கட்டியெழுப்ப நடவடிக்கை

## அமைச்சர் காமினி லொக்குகே தெரிவிப்பு

நாடு முழுவதும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் வேலையில்லாப் பிரச்சினையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு மிக விரைவில் அரச மற்றும் தனியார் துறையில் வேலையினை பெற்றுக் கொடுக்க வழிவகைகள் செய்யப்படும் என தொழில் உறவுகள் உற்பத்தித் திறன் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

நாவலர் வீதியில் அமைந்துள்ள உதவித் தொழில் ஆணையாளர் இல்லத்தில் தொழில் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி படித்த இளைஞர் யுவதிகளிற்கு பணிபுரியும் வாய்ப்புகளை அதிகரிக்கும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு சுயவேலைவாய்ப்பினை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

கொழும்பு போலவே யாழ்ப்பாணத்தையும் சகல அடிப்படை வசதிகளும் நிறைந்த ஒரு இடமாக மாற்றி தொழில் வாய்ப்புகளை வழங்கவும் உள்ளோம்.

இவை தவிர தற்போது சம்பள முறைப்பாடுகள் எமக்கு கிடைத்த வண்ணமுள்ளன. இவை மிக விரை வில் சீர்செய்யப்படும். இதற்காக நாம் 25 மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளோம்.

தற்போது நாம் 13.3 மில்லியன் ரூபாயை ஒதுக்கீடு செய்து கடந்த காலங்களில் மாந்தை உப்பு கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்தவர்களுக்கு நஷ்டஈடாக வழங்கியுள்ளோம்.

இவை தவிர காரைநகர் சீநோர் சீமெந்து நிறுவனத்திற்கும் நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

இவற்றோடு இங்குள்ள இளைஞர் யுவதிகளுக்கு வெளிநாட்டு நிறுவனங்களில் பணிபுரிய ஒழுங்குகளைசெய்யவுள்ளோம்.


யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை அரசாங்க வேலையை எதிர்பார்பவர்கள்தான் அதிகமாகவுள்ளனர். இவர்கள் அரசாங்க வேலையை கௌரவமாக மதிக்கின்றனர். ஆனால் கொழும்பில் அவ்வாறில்லை. தனியார் நிறுவனங்களில் பணிபுரியவே அதிக விருப்பம் காட்டுகின்றனர்.

அதற்கு காரணம் அங்கே அதிக வருமானம் பெறமுடியும் என்பதாலாகும்.

எனவே தனியார் மற்றும் அரசதுறைகள் இரண்டிலும் இளைஞர், யுவதிகள் ஆர்வம் காட்ட வேண்டும் என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# இலங்கை, மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கு தமிழர்களையே தூதுவராக நியமிக்க வேண்டும்

## வீரமணி கோரிக்கை



இலங்கை, மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கு தமிழர்களையே தூதர்களாக நியமிக்க வேண்டும். வெளி நாடுகளில் வாழும் தமிழர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் தனி அமைச்சகம் ஒன்றை மாநில அரசு உருவாக்க வேண்டும் என்று திராவிடக் கழகத்தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் திராவிடர் கழகப் பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய வீரமணி ஊடகவியலாளர்களிடம் கூறுகையில்,

திராவிடர் கழகம் பகுத்தறிவாளர் கழகம் சார்பில் உலக நாத்திகர்கள் மாநாடு திருச்சியில் எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி ஆரம்பமாகி மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

உலகின் பல நாடுகளில் இருந்தும் ஏராளமானோர் பங்கேற்க உள்ளனர். பகுத்தறிவு, அறிவியல் கண்காட்சி, கருத்தரங்குகள், மூட நம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சிகளுடன் பேரணியும் நடைபெறும்.

இலங்கையில் இலட்சக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட நிலையில் எஞ்சியிருப்போரும் அடிப்படை உரிமைகள் வசதிகள் இன்றி அல்லலபடும் நிலை இன்றும் தொடர்கிறது. ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் சொந்த நாட்டிலேயே முள்வேலி முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசின் உதவியுடன் பாரம்பரிய தமிழர்களின் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் நடந்து கொண்டிருக்கிறது.

இந்திய அரசு நேரடியாக தலையிட்டுஎஞ்சியுள்ளதமிழர்களின்வாழ்வுரிமை, சுயமரியாதை ஆகியவற்றுக்கு உத்தரவாதம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை, மலேசியா சிங்கப்பூர் நாடுகளுக்கு தமிழர்களையே தூதர்களாக நியமிக்க வேண்டும். வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் தனி அமைச்சகம் ஒன்றை மாநில அரசு உருவாக்க வேண்டும். (ஸ்ரீ-2)

# வவுனியா வளாகத்தில் ஆராய்ச்சி அமர்வு

(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் வருடாந்த ஆராய்ச்சி அமர்வு இன்று காலை 09 மணியளவில் இலங்கை திறந்த பல்கலைக்கழக வவுனியா மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

போருக்குப் பிந்திய சூழ்நிலையில் இலங்கையின் அபிவிருத்தியில் விஞ்ஞானமும் முகாமைத்துவமும்என்னுந்தலைப்பில் நடைபெறவுள்ள இந்த ஆராய்ச்சி அமர்வு வவுனியா வளாக முதல்வர் இ.நந்தகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

கௌரவ விருந்தினராக பேராசிரியர்களான திருமதி ஆர்.மகேஸ்வரன் மற்றும் எஸ்.இராஜதுரை ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

தொடக்க நிகழ்வில் ஆய்வுக் கட்டுரைகளின் சுருக்கத் தொகுதி ஒன்று வெளியிடப்படவுள்ளது இதனை ஆ.அபரன் அவர்கள் தொகுத்துள்ளார்.

அடுத்து விஞ்ஞான முகாமைத்துவம் என்னும் வருடாந்த ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு 2 கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனால் தொகுக்கப்பட்டு வெளியிடப்படவுள்ளது. (ச)

# சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவுகள்



நம்பிக்கை இழந்த நெஞ்சின் அடித்தளத்திலிருந்து நம்பிக்கையும் ஆறுதலும் அளிக்கும்.

அழியாத பேரின்பத்தின் குழந்தைகளே! ஆ,ஆ! எவ்வளவு இனிமையான, எவ்வளவு நம்பிக்கை ஊட்டும் பெயர்!

அருமை சகோதரர்களே ! அந்த பெயரால் உங்களை நான் அழைக்க அனுமதி தாருங்கள். அழியாத பேரின்பத்தின் வாரிசுகளே!ஆம், உங்களைப்பாவிகள் என்று அழைக்க இந்து மறுக்கிறான். நாம் ஆண்டவனின் குழந்தைகள், அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள், புனிதமானவர்கள், பூரணர்கள். வையத்துள் வாழும் தெய்வங்களே! நீங்கள் பாவிகளா? மனிதர்களை அப்படிச் சொல்வது பாவம். மனித இயல்புக்கே அது அழியாத களங்கம்.சிங்கங்களே, வீறு கொண்டு எழுங்கள். நீங்கள் ஆடுகள் என்கின்ற மாயையை உதறித் தள்ளுங்கள்.நீங்கள் அழியாத ஆன்மா க்கள், சுதந்திரமான, தெய்வீகமான, நிரந்தரமான ஆன்மாக்கள். நீங்கள் சடப்பொருள் அல்ல, நீங்கள் உடல் அல்ல,சடப்பொருள் உங்கள் பணியாள், நீங்கள் சடப்பொருளின் பணியாளர் அல்ல.

# ஹெயிட்டியில் வாந்திபேதி நோய்க்கு பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு

ஹெயிட்டியில் கடந்த சில தினங்களாகக் கட்டுக்கடங்காமல் பரவி வரும் வாந்திபேதி நோய்க்குப் பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

தலைநகரை அண்டிய நகர்ப்பகுதியில் பரவ ஆரம்பித்த இந்நோய் தற்போது தலைநகர் போர்ட் ஓ பிரின்சிலும் வேகமாகப் பரவி வருகின்றது.

இதுவரை 208 பேர் இந்நோய் காரணமாகப் பலியாகியுள்ளதுடன் ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஐ.நா. அலுவலகத் தகவல்களின் படி 2 ஆயிரத்து 364 பேருக்கு இந்நோய் தொற்றியுள்ளது. தலைநகருக்கு வடக்காக உள்ள ஆர்டிபொனைட் நகரிலேயே இந்நோய் ஆரம்பத்தில் பரவ ஆரம்பித்தது.

அங்கிருந்து தலைநகருக்கு விஜயம் செய்த ஐந்து பேருக்கும் இந் நோய் தொற்றியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆர்டிபொனைட் நகரிலேயே நாட்டின் பிரதான சாக்கடை வடிகால் கலக்கும் நதி உள்ளது.

இந்த நகரில் அண்மையில் பெரும் மழை பெய்து வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டது.

இதுவே தற்போதைய நிலைக்குக் காரணமாக இருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

அமெரிக்காவின் நோய்த் தடுப்பு மற்றும் பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த 112 அதிகாரிகள் கொண்ட விசேட குழு அடுத்து வரும் ஒரு சில தினங்களில் அங்கு விஜயம் செய்யவுள்ளது. (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானில் இரண்டு பாடசாலைகள் தீவிரவாதிகளால் குண்டுவைத்து தகர்ப்பு

(இஸ்லாமாபாத்)


பாகிஸ்தானில் உள்ள ஆப்கானிஸ்தான் எல்லையில் பாஜாவூர் ஏஜென்சி மலைப் பகுதியுள்ளது. இது தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்குள்ள பாடசாலைகளை அவர்கள் குண்டுவீசி தகர்த்து வருகின்றனர்.

இந்த நிலையில் அங்குள்ள சவார்ஷாய் பகுதியில் உள்ள 2 பாடசாலைகளின் மீது வெடிகுண்டுகளை வீசி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் அந்த பாடசாலைகள் இடிந்து தரைமட்டமாயின.

இதற்கிடையே சுவாத் பள்ளத்தாக்கில் குஜார் பந்த் என்ற இடத்தில் கடுமையான தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தனர்.

இதை அறிந்த இராணுவத்தினர் மட்டா பகுதியில் பதுங்கியிருந்த தீவிரவாதிகளை சுற்றி வளைத்து அதிரடி தாக்குதல் நடத்தினர்.

இதில் 5 தீவிரவாதிகள் பலியானதுடன் மேலும் பலர் சிக்கியுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)



ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடந்த தற்காப்பு படையினர் நடத்திய அணிவகுப்பில் அந்நாட்டு பிரதமர் நோட்டோ கான் கலந்து கொண்டு பார்வையிட்டார்.

# சாதிக்க துடிப்பவரா நீங்கள்! எச்சரிக்கிறார்கள் விஞ்ஞானிகள்

சாதனையாளர்களுக்கும் வாழ்க்கையில் சாதிக்கத் துடித்து அதற்காக கடுமையாக போராடுபவர்களுக்குமே மன அழுத்தம் அதிகம் ஏற்படுகிறது என்று சிக்காகோ பல்கலைக் கழக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

தங்களுடைய எதிர்கால வெற்றி குறித்து அவர்கள் அடிக்கடி கவலைப்படுவதே இதற்கு முக்கிய காரணம் என்றும் அந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

பொதுவாக ஒருதுறை யில் சாதிப்பவர்கள் தங்கள் இடத்தை தக்க வைத்துக் கொள்ளவும் அடுத்த சாதனைக் காகவும் கடுமையாக உழைக்கிறார்கள்.

மற்றவர்கள் தங்களிடம் இருந்து இன்னும் அதிகம் எதிர்பார்கிறார்கள் என்று நினைப்பும் அவர்களுக்கு அதிகம் உள்ளது. இது அவர்களுக்கு அதிகம் கவலையும் அளிக்கிறது. இதுவே மன அழுத்தத்துக்கும் காரணமாகிறது.

சராசரியான வாழ்க்கை வாழ்பவர்களுக்கு அதிகம் மன அழுத்தம் ஏற்படுவது இல்லை. எனினும் சராசரி வாழ்வில் ஏற்படும் சிறிய பிரச்சினைகளைக் கூட சிலர் பெரிதாக எண்ணி மன அழுத்தத்தை அதிகரித்துக் கொள்கின்றனர் என்றும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். (ஸ்ரீ)

# சாகுபடி தேவைப்படாத நெல்!

நெல் சாகுபடி என்றாலே விதைப்பது முதல் அறுவடை வரை பல்வேறு பராமரிப்பு வேலைகளை விவசாயிகள் செய்தாக வேண்டும். நாற்று நடுதல் , முறையாக நீர் பாய்ச்சுதல் , களையெடுத்தல் , உரம் போடுவது, பூச்சி மருந்து தெளிப்பது என பல்வேறு பணிகளை மேற்கொண்டால் தான் விளைச்சல் நன்றாக இருக்கும். ஆனால் இவை எதுவும் இல்லாமல் அமோகமாக விளையும் காட்டு நெல்லை ஜப்பானிய விவசாயி யோஸ்கிகிடி பல ஆண்டுகளாக விளைவித்து வருகிறார்.

வயல் வெளியில் சென்று நெல்லைத் தூவி விடுவது மட்டுமே எனது முக்கிய வேலை. அதன் பின் நெல் குறிப்பிட்ட காலத்தில் எந்த காலநிலையையும் தாண்டி வளர்ந்து விடும் என்று கூறுகிறார் அந்த 70 வயது விவசாயி. இந்த அரிசியின் சுவையும் சிறப்பாக உள்ளது. இதனால் அவரைத் தேடிவந்து பலரும் இந்த அரிசியை வாங்கிச் சென்றனர். (ஸ்ரீ)

# காஷ்மீர் மாநிலம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியல்ல;

## எழுத்தாளர் அருந்ததிராயின் கருத்தால் சர்ச்சை

காஷ்மீர் சுதந்திர பகுதியா? அல்லது அடிமை நாடா? என்பது பற்றிய கருத்தரங்கம் ஸ்ரீநகரில் நடந்தது. இதில் பிரபல எழுத்தாளர் அருந்ததிராய் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் கூறுகையில், காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாக எப்போதும் இருந்தது இல்லை. இது வரலாற்று உண்மை. இந்திய அரசும் இதை ஏற்று உள்ளது. இங்கிலாந்திடம் இருந்து இந்தியா சுதந்திரம் அடைந்ததும் இந்தியாவுக்கு காலணி ஆதிக்கம் செலுத்தும் எண்ணம் இருந்தது. அதன் விளைவால்தான் காஷ்மீர் இந்தியாவிடம் இருக்கிறது என்று அருந்ததிராய் கூறினார்.



அருந்ததிராய் கருத்து சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.ஏற்கனவே காஷ்மீர் பிரிவினைவாதிகள் இதே கருத்தைக் கூறி வருகின்றனர். சமீபத்தில் காஷ்மீர் முதல் மந்திரி உமர் அப்துல்லாவும் காஷ்மீர் இந்திய பகுதி அல்ல என்று கூறினார். (ஸ்ரீ-2)

# ஈராக் பொதுமக்களை கொன்றதில் அமெரிக்க இராணுவத்துக்கு பங்கு?

## விசாரிக்கக் கோருகிறது ஐ.நா

(நியூயோர்க்)

ஈராக் போர் தொடர்பாக *விக்கிலீக்ஸ்* இணையத்தளம் வெளியிட்ட இரகசிய ஆவணங்களின் அடிப்படையில் ஈராக்கின் பொதுமக்களைக் கொன்றதில் அமெரிக்காவின் இராணுவத்திற்கு பங்கு இருக்கிறதா என்பது குறித்து அமெரிக்க அரசு விசாரணை நடத்த வேண்டும் என ஐ.நா கூறியுள்ளது.

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்க போர் குறித்து 92 ஆயிரம் ஆவணங்களை வெளியிட்ட *விக்கிலீக்ஸ்* இணையத்தளம் சமீபத்தில் ஈராக் போர் தொடர்பான நான்கு இலட்சம் இரகசிய ஆவணங்களை வெளியிட்டுப் பரபரப்பைக் கிளப்பியது. இது போன்று இரகசிய ஆவணங்களை வெளியிடுவது கண்டனத்திற்குரியது என அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் கண்டனம் தெரிவித்தது. எனினும் இந்த ஆவணங்கள் வெளிப்படுத்தும் உண்மைகள் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

ஈராக்கில் 2004 முதல் 2009 வரை அமெரிக்கா தலைமையில் நேட்டோ படைகள் போரில் ஈடுபட்டன. அமெரிக்கப் படையுடன் இணைந்து பிரிட்டன் இராணுவமும் பங்கேற்றது. அதில் மொத்தம் ஒரு இலட்சத்து ஒன்பதாயிரத்து 32 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அதாவது 66 ஆயிரத்து 81 பொதுமக்கள், 23 ஆயிரத்து 984 பேர் ஈராக்கிற்குள் ஊடுருவ முயன்றவர்கள், 15 ஆயிரத்து 196 பேர் ஈராக் பொலிஸார், மூன்றாயிரத்து 771 பேர் நேட்டோ இராணுவத்தினர்.

இதில் ஐ.நா விதித்துள்ள சித்திரவதைக்கு எதிரான நடைமுறைகளை மீறி கூட்டுப் படையினர் ஈராக் பொதுமக்களை தொந்தரவு, சித்திரவதைக்கு ஆளாக்கி கற்பழித்துக் கொலை செய்த கொடூரங்கள், *விக்கிலீக்ஸ்* வெளியிட்ட இரகசிய ஆவணங்கள் மூலம் வெளியுலகுக்குத் தெரியவந்துள்ளது. மேலும் ஈராக்கில் உள்ள பயங்கரவாதிகளுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து அவர்கள் மூலம் இப்படுகொலையில் ஈரான் அரசு ஈடுபட்டுள்ளதும் இதை ஈராக் அரசு வேடிக்கை பார்த்துள்ளதும் இப்போது தெரியவந்துள்ளது.

இது குறித்து ஐ.நா வின் சித்திரவதைப் புலனாய்வுக் குழுத் தலைவர் மேன்ப்ரட் நொவாக் கூறுகையில்,

ஐ.நா விதித்துள்ள மனித உரிமைகள் மீறப்பட்டது குறித்து ஒபாமா நிர்வாகம் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். ஈராக் பொதுமக்கள் கொல்லப்பட்டதில் பிரிட்டன் இராணுவத்தினரும் ஈடுபட்டது குறித்து பொது விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.

இது குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதாக மட்டுமன்றி பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் செய்ததாக இருக்கும் என கூறியுள்ளார். இந்நிலையில் விக்கிலீக்ஸ் வெளியிட்ட இரகசிய ஆவணங்களால் ஈராக் பிரதமருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# பாகிஸ்தான் மசூதியில் குண்டுவெடிப்பு

## 8 பேர் பலி;20 பேர் காயம்

பாகிஸ்தான் மத்திய பகுதியில் உள்ள பக்கடான் நகரில் சூபி பள்ளிவாசல் உள்ளது. நேற்று காலை அங்கு தொழுகை நடத்துவதற்காக ஏராளமானவர்கள் வந்திருந்தனர்.

காலை 6 மணி அளவில் பள்ளிவாசல் வெளிப்புற வாசல் அருகே சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இதனால் அப்பகுதி எங்கும் ஒரே கரும்புகை மண்டலமாக காட்சியளித்தது. இதனால் பரபரப்பும் ஏற்பட்டது. அங்கு வந்த மக்கள் அலறியடித்தபடி ஓட்டம் பிடித்தனர். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 8 பேர் உயிர் இழந்தனர். 20 பேர் படுகாயம் அடைந்தனர்.

தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்று காயம் அடைந்த அனைவரையும் வைத்தியசாலையில் அனுமதித்தனர். தற்போது அவர்களின் நிலைமை கவலைக்கிடமாகி உள்ளது. (ஸ்ரீ-2)

# இந்திய டெஸ்ட் தொடர்; நியூசிலாந்து அணி அறிவிப்பு

(வெலிங்டன்)

இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் வில்லியம்சன், பென்னட் ஆகிய இரண்டு புதுமுக வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் நவம்பரில் ஆரம்பமாகிறது. முதல் டெஸ்ட் அகமதாபாத்தில் நவம்பர் 4 ஆம் திகதி ஆரம்பமாகிறது. அடுத்து ஐதராபாத்தில் (நவம்பர் 12- 16), நாக்பூரில் (நவம்பர் 20-24) இரண்டாவது மற்றும் மூன்றாவது டெஸ்ட் நடக்கிறது.

இதற்கான 15 பேர் கொண்ட நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சமீபத்தில் பங்களாதேசிற்கு எதிரான தொடரில் சதம் அடித்த வில்லியம்சன் இடம்பெற்றுள்ளார். தவிர ஹமிஸ் பென்னட் (23) என்ற இளம் வேகப்பந்து வீச்சாளருக்கு அணியில் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

தவிர அணித்தலைவர் விக்டோரி தலைமையிலான இந்த அணியில் பிரண்டன் மக்குலம், மெக்கின்டோஸ், ரைடர், குப்தில், ரெய்லர், மற்றும் டிம் சவுத்தி உள்ளிட்ட வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இதுகுறித்து தேர்வுக்குழுத்தலைவர் மார்க் கிரேட்பாட்ச் கூறுகையில்,

பங்களாதேஸ் அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரை 0:4 என இழந்ததை ஒரு அணிக்கு எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டுள்ளோம். மிகவும்கடினமான இந்திய அணிக்கு எதிராகப் போராட சிறப்பாகத் தயாராகி வருகிறோம். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வில்லியம்சன் மற்றும் பென்னட்டை தேர்வு செய்துள்ளோம். தவிர மற்ற வீரர்களும் இந்தியாவுக்கு எதிராக உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்துவார்கள் என நம்புகிறோம் என்றார். டெஸ்ட் தொ டர் முடிந்தபின் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் வரும் நவம்பர் 28 ஆம்திகதி ஆரம்பமாகிறது. இதற்கான அணி பின்னர் அறிவிக்கப்படும்.

### 15 வீரர்கள் அடங்கிய அணி

விக்டோரி (அணித்தலைவர்), பரன்ட் அர்னல், ஹமிஸ் பென்னட், குப்தில், ஹப்கின்ஸ், கிறிஸ் மார்டின், பிரண்டன் மக்குலம், மெக்கின்டோஸ், ஆண்டி மெக்கே, ஜிடன் படேல், ரைடர், ரோஸ் ரெய்லர், டிம் சௌத்தி, வோட்லிங், வில்லியம்சன்.

# கடல் நீச்சல் ஆட்டம் தோனி ஜோடி கலக்கல்



(மர்கோவா)

அவுஸ்திரேலிய அணியுடனான ஒரு நாள் தொடரை வென்ற மகிழ்ச்சியில் இந்திய அணியின் தலைவர் தோனி தனது மனைவியுடன் கோவாவில் அரபிக்கடலோரம் சென்று பொழுதைக் கழித்தார்.

இவர் கடற்கரையில் மனைவி சாகஷியுடன் நவீனரக படகில் சீறிப் பறந்தனர். தொடர்ந்து இருவரும் ஒருவரை ஒருவர் தூக்கி, வீசி விளையாடினர்.

தோனியின் கிரிக்கெட் ஆட்டத்தின் மாறுபட்ட காட்சிகள் நேற்று பல பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது.

மனைவியுடன் நீச்சலில் ஈடுபட்டிருந்த நேரத்தில் பீச்சில் குவிந்த ரசிகர்கள் தோனியைச் சுற்றிவளைத்தனர். ரசிகர்கள் தோனி அருகில் சென்று கைகுலுக்கினர். பலர் ஆட்டோக்கிராப் வாங்கினர்.

# போர்முலா 1 கார் பந்தயத்தில் ஸ்பெயினின் அலோன்சா முதலிடம்

போர்முலா 1 கார்பந்தயத்தில் தென்கொரிய கிராண்ட்பிரியில் ஸ்பெயின் வீரர் அலோன்சா வெற்றி பெற்றார்.

இந்த சீசனுக்கான போர்முலா 1 கார்பந்தயம் 17 சுற்றுகளாக நடந்து வருகிறது. இதன் 15-வது பந்தயமாக தென்கொரியன் கிராண்ட்பிரி அங்குள்ள யான்கம் ஓடுதளத்தில் நேற்று முன்தினம் நடந்தது. தென்கொரியாவில் முதல் முறையாக நடந்த இந்த போர்முலா 1 கார் பந்தயத்திற்கான மொத்த தூரம் 309 கிலோ மீற்றர் (55 சுற்று) ஆகும். பலத்த மழை காரணமாக போட்டி தாமதமாக தொடங்கியது.



போட்டி தொடங்கியதும் மீண்டும் மழை பெய்ததால் மறுபடியும் 48 நிமிடங்கள் தாமதம் ஆனது. களத்தில் இறங்கிய 24 வீரர்களும் மழையின் தாக்கத்தையும் சமாளிக்க வேண்டியது இருந்தது. பாதுகாப்பு காரும் பின்னால் சென்றது.

இதில் அதிவேகமாக சாதுர்யமாக காரை இயக்கிய ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ அலோன்சா (பெராரி அணி) 2 மணி 48 நிமிடம் 20.810 வினாடிகளில் இலக்கை கடந்து வெற்றி பெற்றார். இந்த ஆண்டில் அவர் பெற்ற 5-வது வெற்றி இதுவாகும். முதலிடம் பிடித்த அவர் 25 புள்ளிகளையும் தட்டிச் சென்றார். அவரை விட 14.9 வினாடிகள் பின் தங்கிய இங்கிலாந்து வீரர் லிவிஸ் ஹமில்டன் (மெக்லரன்-மெர்சிடஸ் அணி) 2-வது இடம் பிடித்தார். அவருக்கு 18 புள்ளிகள் கிடைத்தன.

பெராரி அணி வீரர் பெலிப் மாசா (பிரேசில்) 3-வதாக வந்தார். அவர் 15 புள்ளிகள் பெற்றார். நடப்பு சம்பியன் மெக்லரன்-மெர்சிடஸ் அணி வீரர் ஜென்சன் பட்டனால் (இங்கிலாந்து) 12-வது இடமே பிடிக்க முடிந்தது. இதே போல் முன்னணி வீரர் மார்க் வெப்பர், விபத்தில் சிக்கி பாதியிலேயே விலக நேரிட்டது.

### அலோன்சா முன்னிலை


இரண்டு முறை சம்பியனான அலோன்சா 15-வது சுற்று முடிவில் 231 புள்ளிகளுடன் சம்பியன் பட்டத்திற்கான வாய்ப்பில் முன்னணியில் இருக்கிறார். அவுஸ்திரேலியாவின் மார்க் வெப்பர் (ரெட்புல் அணி) 220 புள்ளிகளுடன் 2-வது இடத்திலும், ஹமில்டன் 210 புள்ளிகளுடன் 3-வது இடத்திலும், செபாஸ்டியன் வெட்டல் (ஜேர்மனி) 206 புள்ளிகளுடன் 4-வது இடத்திலும், ஜென்சன் பட்டன் 189 புள்ளிகளுடன் 5-வது இடத்திலும் உள்ளனர்

இன்னும் 2 பந்தயம் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் பட்டத்திற்கான வாய்ப்பு தனக்கு ஏறத்தாழ முடிந்து விட்டதாக நடப்பு சம்பியன் ஜென்சன் பட்டன் தெரிவித்து உள்ளார். 16-வது சுற்று பந்தயம் வருகிற 7 ஆம் திகதி பிரேசிலில் நடக்கிறது.

# சூதாட்டப் பெண்ணுடன் ரெய்னா தொடர்பு ஐ.சி.சி. விசாரணையால் பரபரப்பு

(லண்டன்)

இந்திய கிரிக்கெட்டில் மீண்டும் சூதாட்ட சர்ச்சை வெடித்துள்ளது. இலங்கை தொடரின் போது, சூதாட்ட முகவருக்கு நெருக்கமான பெண்ணுடன் சுரேஷ் ரெய்னா காணப்



பட்டுள்ளார். இது பற்றி ஐ.சி.சி. ஊழல் தடுப்பு பிரிவினர் விசாரித்து வருவதாக, பரபரப்பு செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்திய அணி கடந்த ஜுலை-ஆகஸ்ட் மாதங்களில் இலங்கை சென்று, டெஸ்ட் மற்றும் முத்தரப்பு ஒரு நாள் தொடரில் பங்கேற்றது. பாகிஸ்தானில் இலங்கை அணியினர் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதால், இத்தொடரின் போது உச்சக்கட்ட பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்திய வீரர்கள் தங்கியிருந்த ஹோட்டலில்ரகசிய "சிசிடிவி" கமரா பொருத்தப்பட்டு கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

### தொடர்பு அம்பலம்

இந்த கமராவில் சுரேஷ் ரெய்னா, சூதாட்ட முகவர் ஒருவருக்கு நெருக்கமான பெண்ணை, இரவு நேரங்களில் அடிக்கடி சந்தித்த காட்சிகள் பதிவாகியுள்ளன. இது குறித்த செய்தியை லண்டனில்இருந்துவெளியாகும் தி சண்டே டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது,

ஐ.பி.எல்., தொடரில் ஊழல் நடந்ததாக கூறப்பட்டது. பின் லோர்ட்ஸ் டெஸ்டில் சல்மான் பட், முகமெட் ஆசிப், முகமெட் அமிர் உள்ளிட்ட பாகிஸ்தான் வீரர்கள் "ஸ்பொட் பிக்சிங்கில்" ஈடுபட்டனர். இந்தச் சூழலில் இலங்கை தொடரில் இந்திய வீரர் ரெய்னா, சூதாட்ட பெண்ணுடன் காணப்பட்டுள்ளார். இதற்கான "வீடியோ" ஆதாரத்தை பி.சி.சி.ஐ.யிடம் இலங்கை கிரிக்கெட் சபை வழங்கியுள்ளது.

ஆனால், பி.சி.சி.ஐ, செயலர் சீனிவாசன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக இப்புகாரை திரும்ப பெறும்படி இலங்கை கிரிக்கெட் சபையை வலியுறுத்தியுள்ளார். சீனிவாசன் உரிமையாளராக இருக்கும் ஐ.பி.எல், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காகத்தான் ரெய்னா விளையாடி வருகிறார். இப்பிரச்னையில் ரெய்னா தவறு செய்ததாக சந்தேகம் எழவில்லை. ஆனாலும், அவரை காப்பாற்றும் முயற்சிகள் நடந்துள்ளன.

முறைப்படி விசாரணை நடத்தாமல், இச்சம்பவத்தை மூடி மறைக்கும் முயற்சியில் சீனிவாசன் ஈடுபட்டுள்ளார். இது குறித்து ஐ.சி.சி., விசாரணை நடத்தி வருகிறது. தவிர, ஐ.சி.சி, ஊழல் தடுப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவின் விதிமுறைப்படி, சூதாட்டம் தொடர்பான தகவலை முதலில் ஐ.சி.சிக்குத்தான் தெரிவிக்க வேண்டும்.

ஆனால், இலங்கை கிரிக்கெட் சபை தகவலை பி.சி.சி.ஐக்கு முதலில் அளித்துள்ளது. இது பற்றி ரவி சவானி தலைமையிலான ஐ.சி.சி ஊழல் தடுப்பு குழுவினர் விசாரித்து வருகின்றனர். இவ்வாறு அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை செயலர் நிஷாந்தா ரணதுங்கா கூறுகையில்,

ரெய்னா பற்றிய செய்தி புதிதாக இருக்கிறது. இதில் உண்மை எதுவும் இல்லை, என்றார். இப்பிரச்னை பற்றி ஐ.சி.சி, செய்தி தொடர் பாளர் ஒருவர் கூறுகையில்,

எந்த ஒரு ஐ.சி.சி. விசாரணை குறித்தும் கருத்து தெரிவிக்க முடியாது என்றார். கடந்த 2000 ஆம் ஆண்டு அசார் உள்ளிட்ட இந்திய வீரர்கள் சூதாட்ட புகாரில் சிக்கினர். தற் போது ரெய்னாவும் சர்ச்சையில் சிக்கியிருப்பது, ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### பி.சி.சி.ஐ, மறுப்பு

சூதாட்ட புகாரை மறுத்த இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ) செயலர் சீனிவாசன் கூறுகையில்,

ரெய்னா பற்றி இலங்கை கிரிக்கெட் சபை (எஸ்.எல்.சி) அளித்த புகார் மீது பி.சி.சி.ஐ. எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனமீடியாவில் செய்திவெளியாகியுள்ளது. இது ஆதாரமற்ற பொய்யான செய்தி. எஸ்எல்சியிடம்இருந்துஎங்களுக்கு எவ்வித புகாரும் வரவில்லை. இந்தியாவுக்காக சிறப்பாக விளையாடும் ரெய்னாவை வீணாக குறிவைக் கின்றனர் என்றார்.

### யார் அந்த மர்மப் பெண்

ரெய்னாவுடன் காணப்பட்டது சூதாட்டப் பெண் இல்லையாம். இது குறித்து பி.சி.சி.ஐ துணைத்தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில், ரெய்னா மீது பொய்யான ஆதாரமற்ற புகார் கூறப்படுகிறது. ஐ.சி.சி அல்லது இலங்கை கிரிக்கெட் சபையிடம் இருந்து எவ்வித புகாரும் பி.சி.சி.ஐக்கு வரவில்லை. சந்தேகிக்கப்படும் அந்தப் பெண் உண்மையில்ரெய்னாவின் முகவர். அவரது விளம்பர ஒப்பந்தம் தொடர்பான பணிகளை கவனித்து வருகிறார். சில இலங்கை வீரர்களுக்கும் முகவராக உள்ளார்.

ஒப்பந்தங்களில் முறைப்படி கையெழுத்திடத்தான் அவரை,ரெய்னாசந்தித்துள்ளார். இதில் சூதாட்டம் மற்றும் ஊழல் நடக்க வில்லை. தவிர, கிரிக்கெட்டுக்கு அப்பாற்பட்ட விடயமும் பேசப்படவில்லை. மீடியாவில் ஊகத்தின் அடிப்படையில் தவறாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்றார்.

# இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு அக்ரஹார காப்புறுதி மறுப்பு

## தொழிற்சங்க சம்மேளனம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த அரச ஊழியர்களுக்கு அக்ரஹார காப்புறுதி மறுக்கப்பட்டதாக தொழிற்சங்க சம்மேளனம் நேற்று அறிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற காரணத்தினால் 40 இடம்பெயர்ந்த அரச ஊழியருக்கு அக்ரஹார காப்புறுதி மறுக்கப்பட்டுள்ளது.

மூன்று மாதத்திற்குள் விண்ணப்பிக்காத காரணத்தால் இவர்களின் கோரிக்கை மறுக்கப்பட்டுள்ளது.

போர் முடிந்தபின் ஒன்பது மாதங்கள் முகாமில் வைக்கப்பட்டிருந்த இவர்களால் எப்படி உரிய காலத்திற்குள் விண்ணப்பிக்க முடியும்? என தொழிற்சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இவர்கள் வன்னியிலிருந்து வந்தவர்களே ஆவர். யுத்தம் முடிந்த பின்பும் மருத்துவ சான்றிதழ் பெறமுடியவில்லை. இறந்து போனவர்களின் எண்ணிக்கையும் கணக்கெடுக்கப்படவில்லை.

இந்த 40 பேர் மட்டுமல்ல; யுத்தத்தால் அகப்பட்ட சகல அரச ஊழியருக்கும் அக்ரஹார காப்புறுதி பணம் வழங்கப்பட வேண்டும் என்றார் ஜோசப் ஸ்ராலின்.

இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த சகலருக்கும் அறிவித்துள்ளதாகவும் இந்த பிரச்சினைக்கு சாதகமான தீர்வு கிடைக்குமென நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

# தமிழ்ச்செல்வனுக்கு பிரான்ஸில் சிலை

(பாரிஸ்)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு பொறுப்பாளராகவிருந்த சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு பிரான்ஸ் நாட்டில் சிலை நிறுவப்படுகிறது. இந்தச் சிலை தமிழ்செல்வன் மறைந்த டிசம்பர் 2ஆம் திகதி திறக்கப்படுகிறது.

பிரான்சின் லாகூர்நெவ் நகரில் தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்குச் சிலை ஒன்றை அமைப்பதற்கு அம்மாநகர சபை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சு.ப.தமிழ்ச்செல்வனின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தன்று இச்சிலை திறந்து வைக்கப்படவுள்ளது. இது தொடர்பாக லாகூர் நெவ் தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2007ஆம் ஆண்டு நவம்பர் இரண்டாம் நாள் லாகூர் நெவ் நகரசபை, தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து மிகப் பிரமாண்டமாக தமிழ்க் கிராமம் என்ற நிகழ்வு ஒன்றை நடத்தியது. அதில் பிரான்சில் உள்ள அனைத்து சங்கங்களும் இணைந்து கொண்டன.

அந்நிகழ்வுக்கு லாகூர் நெவ் நகர சபை சு.ப.தமிழ்ச்செல்வனை பிரதம விருந்தினராக அழைத்திருந்தனர். அவ்வேளையில் பிரச்சினை காரணமாக வர முடியாது என்றும் அன்றைய நாளில் தொலைபேசி மூலமாக வாழ்த்துக் கூறுவதாகவும் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியிருந்தார்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அன்றைய நாளே அவர் விமானத் தாக்குதலில் உயிர் இழந்தார்.

லாகூர் நெவ் நகர சபைத் தலைவர் அன்றைய நாளில் அவரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி நிகழ்வுகளை நடத்தினார்.

தற்போது சு.ப.தமிழ்ச்செல்வனின் 3ஆம் ஆண்டு நினைவு நாளன்று அவருக்கான நினைவுச் சிலையினை அமைக்க லாகூர் நெவ் நகர சபை ஏற்கெனவே அவரது நினைவாக நடப்பட்டுள்ள மரத்துக்கு அருகில் இடம் ஒதுக்கித் தந்துள்ளது என்றுள்ளது. (எ)

# காணாமல் போன மாண...

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் காணாமல் போயிருந்த கனகாம்பிகைகுளம் அ.த.க. பாடசாலை மாணவனான காந்தலிங்கம் சங்கீதன்(வயது 9)என்ற மாணவன் நேற்று குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் தனியார் கல்வி நிறுவனத்திற்கு சென்ற பிரஸ்தாப மாணவன், அங்கு வகுப்புகள் இடம்பெறாத நிலையில் வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

அவ்வேளை சைக்கிளில் வந்த நபர் ஒருவர் "நீதானே காந்தலிங்கத்தின் மகன்" என தெரிவித்து அழைத்துச் சென்றதாக சங்கீதனுடன் சென்ற சக மாணவர்கள் தெரிவித்ததாக உறவினர்கள் கூறினர்.

மாணவனைக் காணாத நிலையில் நேற்றுமுன்தினம் இரவே கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் அவனது பெற்றோர் முறையிட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்றுக்காலை சிறுவனின் உடல் கனகாம்பிகைக் குளத்தில் இருந்து மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட சடலத்தின் கழுத்துப் பகுதியில் காயங்கள் காணப்படுவதாகவும், வாயில் இரத்தக் கறைகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காணாமல்போன சிறுவன் குளத்தில் சடலமாக கண்டெடுக்கப்பட்டமை குறித்த தகவல் காட்டுத்தீபோல ஊர் மக்களிடையே பரவியதும் அந்தப் பிரதேசத்து மக்களிடையே பெரும் பதற்றமும் பீதியும் ஏற்பட்டுள்ளது.

பாடசாலைக்குச் சென்றுள்ள தமது பிள்ளைகளின் பாதுகாப்பு குறித்து பெற்றோர் அச்சமடைந்து பாடசாலைக்குச் சென்று அவர்களைப் பாதுகாப்பாக வீடுகளுக்கு கூட்டி வருவதற்கு முனைந்துள்ளார்கள்.

சம்பவம் குறித்து அந்தப்பிரதேசத்திற்குப் பொறுப்பான கிராமசேவை அதிகாரி மூலம் பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி மாவட்ட நீதவான் சிவகுமார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேதப் பரிசோதனைக்காக சடலத்தை வவுனியா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. சடலமாக மீட்கப்பட்ட மாணவன் பாடகர் சாந்தனின் சகோதரனின் மகன் என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# இந்தோனேசியாவில்...

பூகம்பம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பூகம்பம் ஏற்பட்ட இடத்திலிருந்து சுமார் 100 கிலோமீற்றர் (62 மைல்) தூரத்திற்கு உட்பட்ட கரையோர பிரதேசங்களே ஆபத்தை எதிர்நோக்கக் கூடியவை என பசுபிக் சுனாமி எச்சரிக்கை நிலையம் தெரிவித்துள்ளது.

ஆனால் சுனாமி அறிகுறிகள் தென்படாததையடுத்து சுனாமி எச்சரிக்கையை நிறுத்தியுள்ளதாக இந்தோனேசிய பூகம்ப ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மேற்கு சுமத்திரா மற்றும் பேங்குலு பிராந்தியங்களின் நகரங்களில் இப் பூகம்ப அதிர்வு உணரப்பட்டது.எனினும் இதுவரை உயிர் இழப்புக்கள் மற்றும் சேதவிபரங்கள் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ச-5)

# புலிகளும் ஐ.தே.கவும்...

அவர்களிடம் ஆதாரங்களாக இருக்கின்ற ஆவணங்கள் காணிகளுக்கு உரிமை கொண்டாடப் போதுமானவையாக இல்லை என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் ஜாதிக ஹெல உறுமய வின் ஊடகப் பேச்சாளர் ஆங்கில இணைய பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீதும் ஐக்கிய தேசியக் கட்சி அரசின் மீதும் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு,

யாழ்ப்பாணத்தில் சொந்த நிலபுலங்களில் வாழ்ந்து வந்த சிங்கள மக்கள் 1983 ஆம் ஆண்டு கலவரத்திற்குப் பின் பயங்கரவாத தாக்குதல் அச்சத்தின் காரணமாக சொத்துப் பத்துக்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு தென்னிலங்கைக்கு ஓடிவந்து விட்டார்கள்.

அவர்களிடம் காணிகளின் உரிமையை நிலைநாட்டும் வகையில் உறுதிகள் உள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்-ஐ.தே.க. அரசு ஆகியோருக்கிடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபோது ஐ.தே.க. அரசு இக்காணிகளின் உரிமையை புலிகள் இயக்கத்திற்கு தேவையானவர்களுக்கு தாரைவார்த்துக் கொடுத்துவிட்டது.

அதாவது காணிகளின் உரிமைகள் இரகசியமான முறையில் கைமாற்றப்பட்டிருக்கின்றன. உறுதிகள் பெயர் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இது மாபெரும் குற்றச் செயலும் சட்டவிரோத நடவடிக்கையும் ஆகும்.

ஐ.தே.க.அரசு இத் துரோகத்தை செய்திருப்பதன் மூலம் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றமையை நியாயப்படுத்தியிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி கிளிநொச்சி, திருகோணமலை, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்தும் அன்று புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த ஏனைய மாவட்டங்களிலிருந்தும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பயந்து வெளியேறிச் சென்ற சிங்கள மக்களுக்கு சொந்தமான காணிகளுக்கும் இது தான் நடந்துள்ளது.

இதை நிரூபிக்கக் கூடிய தெளிவான ஆதாரங்கள் எங்களிடம் உண்டு. எனவே தற்போதைய அரசு இச் சிங்கள மக்களை சொந்த இடங்களில் கட்டாயம் மீள்குடியேற்ற வேண்டும்.

உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என்று அரசை எழுத்து மூலம் கோரியுள்ளோம்.

தமிழர்களும் முஸ்லிம்களும் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படுகின்றபோது சிங்களவர்கள் மாத்திரம் ஏன் மீள்குடியேற்றம் செய்யப்படக் கூடாது? சிங்கள மக்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றப்படுகின்றமையை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மாவீரர் குடும்பங்கள் புலி ஆதரவு சக்திகள் ஆகியனவே எதிர்க்கின்றன.

இதுவும் சிங்கள மக்களுக்கு எதிரான இன்னொரு இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையின் வடிவமே என அவர் தெரிவித்துள்ளார். (எ-1)

# தாதியர்கள் பணி பகிஷ்...

உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்தது.

மூன்று நாட்களுக்குள் அரசாங்கத்தின் பதிலை எதிர்பார்ப்பதாகவும் தவறின் தமது புதிய எதிர்கால நடவடிக்கைகளை தாம் அறிவிப்பர் என தாதியர் சங்கம் அறிவித்துள்ளது.

வெளிநடப்பு பூரண வெற்றியளித்ததுடன் பிரதான, மாகாண வைத்தியசாலைகளில் வழமையான சேவைகள் நிறுத்தப்பட்டன என தாதியர் சங்கத் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

அவசர சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட அவசர சத்திரசிகிச்சைகள், பிரசவ அறைக் கடமைகள் நிறுத்தப்பட்டன.

இதேவேளை வெளிநடப்பு காரணமாக 150 சத்திர சிகிச்சைகள் ஒத்திவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தாதியர்களின் வெளிநடப்பு பெரியளவில் தாக்கம் எதனையும் விளைவிக்கவில்லை.

தாதியர் சேவை யாப்பை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் யாப்பு திருத்தங்களினால் எவரும் நியாயம் தவறி நடத்தப்பட மாட்டார்கள் எனவும் சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ச-6)

# நாடாளு...

தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தாமும் அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர் என்றும் குறித்த தகவல் வட்டாரத்திலிருந்து மேலும் தெரியவருகிறது. (ச-5)

# சர்வதேச நீதிமன்றில்...

இலங்கை அரசு இந்த உடன்படிக்கையில் கையெப்பம் இட்டிராத போதும் இனப்படுகொலை மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை புரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ரோம் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட 120 நாடுகளுக்கு வருகைதரும் சந்தர்ப்பத்தில் கைது செய்யப்படலாம்.

அல்லது குற்றமிழைத்தவர்கள் அந்த நாடுகளுக்கு வருகைதரும் சந்தர்ப்பத்தில் டென்மார்க் சட்டத்தரணி தனது குற்றப் பத்திரிகையின் அடிப்படையில் அவர்களைத் தடுத்து வைக்க வேண்டும் என குறிப்பிட்ட நாடுகளிடம் வேண்டிக் கொள்ளலாம்.

டென்மார்க் ஊடகங்கள் நேற்று முன்தினம் பிரதான செய்தியாக இந்த விடயத்தை வெளியிட்டிருந்தன.

டென்மார்க் தமிழர்களின் இந்த நடவடிக்கையால் இலங்கை ஜனாதிபதியின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சகல ஊடகங்களும் தெரிவித்திருந்தன. (ச-5)

# விளக்கமறியல்...

நேற்று அவரை நீதிமன்றில் ஆஜர் செய்த அதிகாரிகள் அவருக்கு எதிரான குற்றப் பத்திரிகை சட்டமா அதிபரின் கவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் விரைவில் நீதிமன்றத்தில் கையளிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தனர்.

அதேநேரம் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து அது தொடர்பில் தாம் இன்னும் மேலதிக அறிவுறுத்தல் எதையும் பெறவில்லை என்று இரகசியப் பொலிஸாரும் நீதிமன்றில் தெரிவித்தனர்.

அதனையடுத்து தமிழினிக்கான விளக்கமறியலை எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி வரை நீடித்து நீதவான் உத்தரவிட்டார். (ச-5)

ஆள் தேவை

Play Group நேசரியில் படிக்கின்ற சிறுபிள்ளைக்கு மாலை 3.00 மணி தொடக்கம் 7.30வரை பாடம் சொல்லிக்கொடுப்பதற்கும், பொழுதைக் கழிப்பதற்கும் ஆள் தேவை.வலிகாமம் மேற்குப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-
TP.:0776028734
(2741)

பான்சி கடைக்கு வேலையாள் தேவை

யாழ். நகரிலுள்ள பான்சி மற்றும் மணிக்கூடு விற்பனை நிலையத்திற்கு பெண்பிள்ளைகள் வேலைக்குத் தேவை. நகரிற்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:-0779793300
021 222 7638
(2732)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.